Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசமாகக் கண்களைப் பரிசோதித்துச் சிறந்த கண்ணாடிகளைப் பெற்றுக்கொள்ளவும், இழந்த பற்களுக்கு நிகரான சங்குப் பற்களைக் கட்டிக் கொள்ளவும், பொருத்திக்கொள்ளவும், உறுதி மிக்க பற்கிளிப்புக்களைப் பொருத்திக்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்

எரிக்கனேஷ்

564, 566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 222 2486

இல.91, கே.கே.எஸ்.வீதி, கொக்குவில் சந்தி கொக்குவில்.
இல,80 கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 மார்கழி 01 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 துல்ஹஃதா 03 (16.12.2004) வியாழக்கிழமை இதழ்:77

# ஜே.வி.பியினரின் நடவடிக்கைகள் சமாதான முயற்சியை பாதிக்கும்!

## உதவி வழங்கும் நாடுகள் கடும் கண்டனம்

இலங்கையின் சமாதான முயற்சிகள் தொடாபாக அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி கொண்டிருக்கும் நிலைப்பாடுகள் - சமாதான முயற்சிகளைப் பாதிக்கக்கூடியவகையில் அமைந்திருப்பதாக, உதவிவழங்கும் நாடுகளின் இணைத் தலைவர்களின் பிரதிநிதிகள் கண்டனம் தெரிவித்தனர்.

ரோக்கியோ மாநாட்டின் இணைத் தலைவர்களாகப் பங்குபற்றிய அமெரிக்காவின் சார்பில் இலங்கைக்கான தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட், ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் நெதர்லாந்து தூதுவர் சூசன் பிலாங்கற், ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா ஆகியோர் நேற்று விடுத்த கூட்டறிக்கையிலேயே இவ்வாறு கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

சமாதான நடவடிக்கைகள் பற்றியும், நோர்வே அரசின் அனுசரணை முயற்சிகள் தொடர்பாகவும் இலங்கை அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பியினர் தெரிவித்து வரும் கருத்துக்கள் சமாதான நடவடிக்கைகளைப் பாதிக்கக்கூடியவை.

இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகள் குறித்து ஜே.வி.பியினர் மேற்கொண்டுவரும் எதிர்ப்பிரசார நடவடிக்கைகள், சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும், நோர்வேயின் அனுசரணைப் பணி தொடர்பாகவும், அரசாங்கத்தின் நிலைப்பாடு தொடர்பாகச் சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான விரோதக் கருத்துக்கள் நம்பிக்கையிழக்க வைக்கின்றன!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்



(கிளிநொச்சி)

**தற்போது நடைபெற்றுவரும் சம்பவங்கள், நிகழ்வுகள் மற்றும் சமாதானத்துக்கு எதிராக தெற்கிலிருந்து வரும் கருத்துக்களை வைத்துப் பார்க்கும்போது பேச்சுவார்த்தையோ, சமாதான முன்னெடுப்புக்களோ, ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை என விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார். நேற்று நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மைச் சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் –**

இன்றைய நெருக்கடிநிலை சம்மந்தமாக எமது தலைமைப்பீடத்தினுடைய உறுதியான நிலைப்பாடுகள் சம்மந்தமாகவும் எமது தற்போதைய நிலைப்பாடு குறித்தும் அரசாங்கத்திற்கு தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

எங்களைப் பொறுத்தவரை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்வுகள், சம்பவங்கள், தெற்கிலே இருந்து வருகின்ற சமாதானத்திற்கு விரோதமான கருத்துக்கள், இவற்றை வைத்துப் பார்க்கும்போது பேச்சுவார்த்தையோ சமாதான முன்னெடுப்புக்களோ ஆக்கபூர்வமாக முன்னெடுக்கப்படும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

*கேள்வி:* நெருக்கடி நிலையை எந்த வகையில் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை நோர்வே அனுசரணையாளர்கள் மூலம் அறிவித்திருக்கின்றீர்கள்?

*பதில்:* சமாதான முன்னெடுப்புக்கள் மீதும், அமைதி முயற்சிகள் மீதும் எமது மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நெருக்கடியான நிலைக்குள் போர்நிறுத்த உடன்படிக்கை!

## எரிக் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையே 2002 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை தற்போது மிகவும் நெருக்கடி நிலைக்குள் சிக்கியுள்ளதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

நேற்று கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

தற்போதயை நிலை நெருக்கடிமிக்கதாகவே உள்ளது. 2002 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்தத்தின் பின்னர் தற்போது நிலைமை மோசமாக உள்ளதென்பதனை மறுப்பதற்கில்லை. அண்மைய காலங்களாக இரு தரப்பினரும் மேற்கொண்டு வரும் எரிச்சலூட்டும் நடவடிக்கையால் நோர்வே ஆழமான கவலையை அடைந்துள்ளது. இந்த நடவடிக்கைகளால் யுத்த நிறுத்த உடன்படிக்கையை கட்டியெழுப்ப முடியாதுள்ளது.

இரு தரப்பினரும் யுத்தநிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடிப்பதில் உறுதியாக உள்ளதாக மிகவும் தெளிவான முறையில் தெரிவித்துள்ளனர். தற்போது சமாதான நடவடிக்கைகள் தொடர்பாக நம்பிக்கை இழந்திருக்கும் இரு தரப்புக்களது நம்பிக்கைகளையும் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். எனவே இரு தரப்பும் பரஸ்பரநம்பிக்கையை கட்டியெழுப்புவது அவசியமானதாகும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தரையால் வந்த சொல்ஹெய்ம் ஹெலியில் கொழும்பு திரும்பினார்





(கிளிநொச்சி)

காலநிலைச் சீர்கேட்டால் தரைவழியாக கிளிநொச்சிக்கு வந்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்- விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்னர் விமானப்படை ஹெலிமூலம் கொழும்பு திரும்பினார்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்காக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் பயணம் செய்த விமானப்படை ஹெலிகொப்டர் சீரற்ற காலநிலை காரணமாக அனுராதபுரத்தில் தரையிறங்கியது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு விமானப் பறப்புக்களை மேற்கொள்வதில்லை என்று விமானப்படையினர் முன்னர் விடுத்த அறிவிப்பின்படி சொல்ஹெய்ம் (12 ஆம் பக்கம் பார்க்க)

# கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி

## 2005ஆம் ஆண்டுக்கான வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழங்கு பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 30.12.2004ஆம் திகதிவரையும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

### பொருட்கள்

1. காகிதாதிகள், எழுதுபொருட்கள்
2. அலுவலக உபகரணங்கள் (தளபாடங்கள், இரும்பு அலுமாரிகள்)
3. வைத்திய உபகரணங்கள்.
4. சித்த மருத்துவ மருந்துகள்.
5. கோலவுடைத் துணிகள், யன்னல் துணிகள், ஏனைய துணிவகைகள்.
6. பாதணிகள், மழைக்கவசம் மற்றும் தோற்பொருட்கள்.
7. கட்டடப் பொருட்கள் (சீமெந்து, ஓடுகள் முதலியன).
8. தீந்தைகள் நிறந்தீட்டும் பொருட்கள் முதலியன.
9. கிறவல்.
10. நீர் வழங்கும் பொருட்கள், பி.வி.சி குழாய்கள் முதலியன.
11. வாகன இயந்திர உதிரிப்பாகங்கள் துணை உறுப்புக்கள்.
12. மின்சார இயந்திரப் பொருட்கள், மின் கருவிகள்.
13. கிடுகுகள்.
14. எரிபொருள், உராய்வு நீக்கிகள், கிறிஸ்.
15. இரும்புப் பொருட்கள்.
16. பனை மரங்கள், சலாகைகள்.
17. நூலகத்திற்குரிய நூல்கள்.
18. வாகனங்களிற்கான பற்றறிகள், ரயர், ரியூப் முதலியன.
19. தீராந்திகள், றீப்பைகள், பலகைகள்.
20. தும்புத்தடி, விளக்குமாறு, நார்க்கடகம், கல்துடைப்பம், இழைக்கயிறு, தேடாக் கயிறு முதலியன.
21. சுத்திகரிப்புப் பிரிவுகளுக்கான கிருமி நாசினிகளும், மருந்துகளும்.
22. கணனி, கணனிகளுக்கான உதிரிப்பாகங்கள், போட்டோப் பிரதி இயந்திரம், போட்டோ பிரதி இயந்திரத்துக்கான (ரொஸீபா, காபொன், சார்ப்) வகைகளுக்கான உதிரிப்பாகங்கள் வழங்கல்.

### சேவைகள்

1. அச்சிடுதல்.
2. தட்டச்சு இயந்திரம் திருத்தம்.
3. மோட்டார் வாகனங்கள் திருத்தம்.
4. ரியூப் ஒட்டுதல். (வாகனங்கள்)
5. ஒட்டுவேலைகள், உலோக வேலைகள்.
6. ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு பாரம் குறைந்த வாகனங்களை வாடகைக்கு விடல், (சுத்திகரிப்பு வேலைப்பகுதி, ஏற்றியிறக்கல் வேலைகளுக்கு ரக்ரர் வாடகைக்கு விடல்)
7. கோலவுடை தைத்தல்.
8. மின் மோட்டார்கள், மின் விசிறிகள், ஜெனறேற்றர்கள், குளிர்சாதனப் பெட்டிகள் திருத்தம்.
9. மின் கலங்களுக்கு மீள மின்வலுவூட்டல்.
10. றப்பர் முத்திரை தயாரித்தல், புளக் தயாரித்தல்.
11. வாகனங்கள் சேவிஸ் செய்தல்.
12. கணனி இயந்திரம் போட்டோக் கொப்பி இயந்திரம் திருத்தம் செய்தல்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'வழங்கல்கள், சேவைகள் - 2005' எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கவேண்டும்.

வழங்கல்களுக்கும், சேவைகளுக்குமான விண்ணப்பங்கள் *விசேட ஆணையாளர் கரைச்சிப் பிரதேசசபை, கிளிநொச்சி* என முகவரியிடப்படல் வேண்டும்.

ஒவ்வொரு வழங்கல், சேவைகளுக்கும், தனித்தனியான விண்ணப்பம் அனுப்பப்படல் வேண்டும். இப்படிவங்களை கரைச்சிப் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு வீண்ணப்பத்துடனும் பதிவுக் கட்டணமாக (ரூபா 180.00 உடன் மேலதிகமாக வற்வரி ரூபா 27.00) ரூபா 207.00 பெறுமதியான காசுக் கட்டளை விசேட ஆணையாளர் கரைச்சிப் பிரதேசசபை என்ற பெயருக்கு பெறப்பட்டு இணைத்து அனுப்பி வைக்கவேண்டும். பணமாகச் செலுத்த விரும்புபவர்கள் சபையின் வருமானக் கிளையில் நேரடியாக வேலை நாட்களில் செலுத்த முடியும்.

கூறுவிலைகள் பதிவுசெய்யப்பட்டவர்களிடமிருந்து கோரப்படும்.

கோரப்படும்போது கூறுவிலைகள் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது உரிய நேரத்துக்கு பொருட்கள் சேவைகள் வழங்கத் தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் சேவைகள் வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தல் இன்றி பதிவுப் புத்தகத்தில் நீக்கப்படும்.

(பொன்.நித்தியானந்தம்)
விசேட ஆணையாளர்,
கரைச்சிப் பிரதேசசபை,
கிளிநொச்சி.
2004.12.14.

(C/2893)

## சுவர் இடிந்து வீழ்ந்து மாணவன் படுகாயம்

வீட்டில் மண்சுவர் இடிந்து விழுந்ததால் தற்போது நடைபெறும் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சைக்குத் தோற்றும் மாணவன் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவன் த.காந்தமூர்த்தி (வயது-17) என்பவரே காயமடைந்தவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது நேற்று அதிகாலை க.பொ.த சாதாரணதர பரீட்சைக்காக படித்துவிட்டு நித்திரை செய்த வேளை மண்சுவர் இடிந்துவீழ்ந்ததால் அருகில் இருந்த அலுமாரி வீழ்ந்து கண்ணாடி உடைந்ததால் காலில் பலத்த காயம் அடைந்துள்ளார். இவர் சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## தென்னைகளின் பயன்களைப் பெறுவதற்கு உசன் பகுதி மக்களுக்கு படையினர் அனுமதி

இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள உசன் பகுதியிலுள்ள தென்னந்தோட்டங்களில் பயன் பெறுவதற்கு படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

கடந்த திங்களன்று பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் யாழ் மாவட்ட தென்னந்தோட்ட உரிமை யாளர் பிரதிநிதிகளுக்குமிடையே விசேட கலந்துரையாடல் யாழ். சிவில் நிர்வாக பணிமனையில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலின் போது யாழ்மாவட்டத்தில் உள்ள தென்னந்தோட்ட உரிமையாளர்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் தமது தென்னந்தோட்டங்களில் தேங்காய் பறிப்பதற்கு அனுமதி தருமாறு இந்த கலந்தரையாடலின்போது தோட்ட உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்தனர். இதன்படி உசன் பிரதேசத்தில் உள்ள தென்னந்தோட்ட உரிமையாளர்கள் அந்தப் பிரதேச கிராம உத்தியோகத்தரின் சிபார்சுடனும் இராணுவத்தினரின் அனுமதியுடன் தொழிலாளர்களை ஈடுபடுத்தி தேங்காய்களை பறிப்பதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கியுள்ளனர். இந்தக் கலந்துரையாடலின்போது 53ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி மற்றும் தென்னை அபிவிருத்தி சபைத் தலைவர் ஏ.நல்லதம்பி உட்பட உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

### இளைஞனை காணவில்லை

வேலைக்குச் செல்வதாகக் கூறிச்சென்ற இளைஞன் பன்னிரண்டு நாட்களாகியும் வீடு திரும்பவில்லை என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் உறவினரால் முறையிடப்பட்டுள்ளது.

நாவலர் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயகுமார் அஜந்தன் (வயது-17) என்பவரையே காணவில்லை என்று உறவினரால் முறையிடப்பட்டுள்ளது.

ஆனைப்பந்தியிலுள்ள உறவினர் வீட்டில் தங்கி வேலைக்குச் சென்றுவந்த இளைஞன் வழமை போல் கடந்த மூன்றாம் திகதியும் வேலைக்குச் செல்வதாகக் கூறிச் சென்றதாகவும் அவர் இன்னமும் வீடு திரும்பவில்லை என்றும் முறையிடப்பட்டுள்ளது.

### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வரும் சொற்பொழிவுத் தொடரில், நாளை மாலை 6.00 மணிக்கு "வாசகரும் வாசகமும்" எனும் பொருளில் இளைப்பாறிய அதிபர் எஸ்.செல்லத்துரை சொற்பொழிவாற்றவுள்ளார். அன்றைய தினம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியை சுகன்யா சிவானந்தனின் திருவாசகப்பண்ணிசையும் இடம்பெறவுள்ளது.

### கஜமுக சங்காரம்

(மீசாலை)

மீசாலை திருநீல கண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய வருடாந்த கஜமுகாசுர சங்காரம் இன்று மாலை 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

வருடாந்தம் நடைபெறும் விநாயக விரதத்தின் 20 ஆம் நாளன்று இந்தக் கஜமுகாசுர சங்காரம் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (25)


நிறைஞ்சனாஸ் சங்கானை
சரத்குமார், நிகிதா நடித்த
சத்ரபதி
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
SPIDER MAN - 2

நாகம்ஸ் சுன்னாகம்
அஜித், பூஜா மற்றும் பலர் நடித்த
அட்டகாசம்
கா.நே 11.00, 3.00, 7.00 (பு.நே)
17 முதல்

இலங்கையிலும் இந்தியாவிலும்
ஒரேதினவெளியீடான
அர்ஜின், சாயாசிங்,
லைலா, வடிவேல் நடித்த
ஜெய் சூர்யா
முற்பதிவுகளுக்கு நாகம்ஸ் சினிமா யாழ்.பெயின்
காடன் - 326, K.K.S.றோட் யாழ்பாணம்

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
இன்றுமுதல் (குளிரூட்டப்பட்டது)
பிரசாந், நவ்யா, பிரகாஸ்ராஜ் நடித்த
அழகிய தீயே
(ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30 2.30 (பு.நே)
தினசரி இரவு 9.00 மட்டும்
(ஆங்கிலப்படம்) HULK

ராஜா யாழ்ப்பாணம்.
16ம் திகதிவரை அநேகரின்
வேண்டுகோளுக்கிணங்க
சேரன், சிநேகா, கோபிகா,
மல்லிகா நடித்த
ஆட்டோகிராப்
(ரீல்ஸ்)
புதிய நேரம்: 10.30. 2.30. 6.30 மட்டும்

முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

அன்ரனிதாஸ் கெவின்
இன்று (16.12.2004) தனது முதலாவது பிறந்ததினத்தைத் தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடும் அன்ரனிதாஸ் கெவினை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறோம்.
வாழ்த்துவோர் - அப்பம்மா, அப்பப்பா,
அத்தை மரியநாயகி, அத்தை யாழினி,
சித்தப்பா சாண்டோ.
(C/3475)

# அதிரடிப்படை அதிகாரிகள் கிழக்கில் இடமாற்றம்!

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் கட்டளைப் பீடத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

விசேட அதிரடிப்படையின் கிழக்கு மாகாண இயக்குநராக பொலிஸ் அத்தியட்சகர் உபுல் செனவிரத்ன நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இதேவேளை, அதிரடிப்படையின் கிழக்கு மாகாண இயக்குநராகக் கடமையாற்றி வந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த இரத்னாயக்க - நிர்வாகப் பொறுப்பில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த மாற்றங்கள் வழக்கமாக மேற்கொள்ளப்படுவதுதான். இதில் எந்த விசேட நோக்கங்களும் கிடையாது என்று விசேட அதிரடிப்படை கட்டளைஅதிகாரி பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் லியூ தெரிவித்தார்.

## அதிகரித்த ஓய்வூதியக் கொடுப்பனவுக்கு 30 கோடி ரூபா தேவை

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஓய்வூதியக் கொடுப்பனவை அதிகரிப்பதற்காக, மாதாந்தம் 30 கோடி ரூபா தேவைப்படுவதாக, ஓய்வூதியக் கொடுப்பனவுப் பணிப்பாளர் ரி.வி.திலகரட்ணா தெரிவித்தார்.

ஓய்வூதியர்களுக்கு டிசம்பர் மாததத்துக்கு வழங்கப்பட வேண்டிய அதிகரித்த கொடுப்பனவுப் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும், கொடுப்பனவு ஜனவரி மாதத்துக்குரிய ஓய்வூதியக் கொடுப்பவுடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (தே)

# பட்டதாரி பயிலுநர்கள் 621 பேருக்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் நியமனம்

(கொழும்பு)

பட்டதாரிப் பயிலுநர்கள் 621 பேருக்கு -அரச பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் நியமனம் வழங்கப்படவுள்ளது.

இவர்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 3 ஆம் திகதி முதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என, அரச பொது நிர்வாக உள நாட்டலுவல்கள் அமைச்சின் பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அனைவரும் அரச பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சினதும், அமைச்சின் கீழுள்ள இளைப்பாற்றுச் சம்பளத் திணைக்களம், பதிவாளர் நாயகம் திணைக்களம், அரச கரும மொழிகள் திணைக்களம் ஆகியவற்றிலே இவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று அனைத்துத் துறைகளிலும் பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்குவதற்கான செயற்பாடுகள் இடம் பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தே)

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வேண்டுகோள்

தமிழர் தாயகத்தில் பெரு வெள்ளத்தால் அழிவுகளைச் சந்தித்து, பாதிக்கப்பட்டு நிர்க்கதியாகியுள்ள ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மகளுக்கு - உடனடியாக உதவிகளை வழங்க முன்வருமாறு, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளிடம், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர வேண்டுகோளை விடுத்திருக்கிறது.

கடந்த 4 நாட்களாக தமிழர் தாயகத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக, ஏற்பட்டுள்ள வெளப்பெருக்கால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மிகக்கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

தம் இருப்பிடங்களை இழந்து பாடசாலைகளிலும், பொது இடங்களிலும் இந்த மக்கள் தங்கியிருக்கின்றனர். இவர்களுக்கு அரசினது புனர் நிவாரண நிர்வாகங்களில் இருந்து எந்தவித உடனடி உதவிகளும் வழங்கப்படவில்லை. தமிழர் தாயகப் பகுதி என்ற காரணத்தால் அரசால் அசமந்தம் காட்டப்படுகின்றது.

வெள்ளத்தால் அழிவுகளை சந்தித்து அவலப்படும் எமது மக்களுக்கு - உடனடியாக அவசர உதவிகள் தேவைப்படுகின்றன.

அவலப்படும் எம் உறவுகளுக்கு உதவ, புலம்பெயர் வாழ் தமிழ் உறவுகள் முன்வரவேண்டும் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

நிதி, உடைகள் உள்ளிட்ட வகைகளில் புலம்பெயர் வாழ் தமிழ் உறவுகள் தத்தமது நாடுகளில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக கிளைகளில் உதவிகளை கையளிக்கலாம் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது. வெள்ள அழிவால் அவலப்படும் உறவுகளுக்கு அவசரமாக உதவ முன்வருமாறு புலம்பெயர் வாழ் தமிழ் உறவுகள் வேண்டப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் 68 ஆயிரம் பேரும், அம்பாறையில் 40 ஆயிரம் பேரும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய தமிழர் தாயக மாவட்டங்களில் இதே அளவு மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு அவசர உதவிகளை வழங்குவதில் தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மும்முரமாக ஈடுபட்டு வருகிறது.



வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக ரிரோன் பெர்னாண்டோ திருகோணமலை அலுவலகத்தில் தனது கடமையைப் பொறுப்பேற்ற போது எடுக்கப்பட்ட படம். படம் : சசிகுமார்

# அக்கரைப்பற்று கொலைக்கு குயிலின்பன் கண்டனம்

அக்கரைப்பற்றில் இளைஞரொருவர் நேற்றுமுன்தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தை அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொல்லப்பட்ட இளைஞர் இரண்டு மாவீரர்களின் சகோதரராவார். இந்தச் சம்பவம் முழுமையாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலேயே நடைபெற்றுள்ளது. இதனை விடுதலைப்புலிகள் வன்மையாகக் கண்டிக்கின்றனர்.

இது போன்ற பல சம்பவங்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெற்றுள்ளது. இவை அனைத்துக்கும் இராணுவத்தினரே பொறுப்பேற்க வேண்டும் எனவும் இவ்வாறான சம்பவங்கள் மேலும் நடைபெறாமல் இராணுவத்தினர் இதற்கு முற்றுப்புள்ளிவைக்க வேண்டுமெனவும் அந்தக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரணில் மற்றும் லொக்குபண்டார ஹொங்கொங்கிற்குப் பயணம்

(கொழும்பு)

எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் சபாநாயர் லொக்குபண்டார ஆகியோர் ஹொங்கொங்கிற்குச் சென்றுள்ளனர்.

எனினும் அவர்களின் விஜயம் குறித்த நோக்கம் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதேவேளை பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா மாநாடு ஒன்றுக்காக ஹொங்கொங் சென்றுள்ளதால், அவருக்குப் பதிலாக நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க பதில் பிரதம நீதியரசராக இரண்டு வாரங்களுக்குப் பதவி வகிப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்குபண்டார தமது பதவியிலிருந்து விலகி, ஜாதிக ஹெல உறுமய கட்சிக்கு அந்த வாய்ப்பை வழங்கலாம் என்ற தகவல் ஒன்றும் வெளியாகியுள்ளது.

ஆளும் கட்சியின் முயற்சியை முறியடிக்கவே இந்தத் திட்டம் ஐக்கிய தேசியக் கட்சியால் வகுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.

## மண்சரிவில் குழந்தை உட்பட நால்வர் பலி

வெலிமட பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் குழந்தை உட்பட நால்வர் பலியாகியுள்ளனர்.

நாட்டில் பரவலாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக பல இடங்களில் மண் சரிவு ஏற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

நேற்று அதிகாலை வெலிமடப் பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் இரு வீடுகள் முற்றாக மண்ணுக்குள் புதையுண்டு போயுள்ளதாகவும், இந்த மண்சரிவில் சிக்கி நான்கு பேர் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மாணவி மீதான வல்லுறவு வழக்கில் குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறை

மட்டக்களப்பு மகிழூரில் 1999 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 12 ஆம் திகதி 15 வயது மாணவி ஒருவரை பாலியல் வல்லுறவுககுட படுத்தப்பட்டமை தொடர்பான வழக்கில் - குற்றவாளிக்கு நீதிமன்றம் 10 வருடம் கடூழியச் சிறைத் தண்டனையுடன், ஒரு லட்சத்து 75 ஆயிரம் ரூபா நட்டஈடு செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்றது.

எதிரி இல்லாமலே, எதிரியான சிவகுரு சிவகுமார் என்பவரை நீதிமன்றம் குற்றவாளியாக கண்டு இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுப்ரமணியம் பரமராஜா இந்த தீர்ப்பை வழங்கினார்.

குற்றவாளி தலைமறைவாக இருப்பதால் அவருக்கு எதிராக பகிரங்க பிடியாணை உத்தரவைப் பிறப்பித்த நீதிபதி அதன் பிரதிகளை களுவாஞ்சிககுடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் அனுப்பி வைககுமாறு பதிவாளருக்கு உத்தரவிட்டார்.

அத்தோடு குற்றவாளிக்கு ரூபா 5 ஆயிரம் தண்டப்பணமும் விதிக்கப்பட்டுள்ளது. அரச தரப்பில் அரச சட்டவாதி டி.எஸ்.சூசைதாஸ் ஆஜரானார்.

# சமாதான முயற்சியின் வெற்றிக்கு விட்டுக்கொடுப்புக்கள் அவசியம்!

## அமெரிக்க தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரீட்

இலங்கையின் சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க வேண்டுமானால் வேதனைதரும் விட்டுக்கொடுப்புக்கள் அவசியம் என அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரிலான்ஸ்ரீட் தெரிவித்தார்.

இலங்கையின் சர்வதேச உறவுகள் நிதியகத்தின் ஏற்பாட்டில் அளப்பாங்கு மற்றும் செயற்பாடுகள் தொடர பான அளவிடுகையின் வெளியீட்டு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் மக்களின் அபிலாசைகளை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம் மக்களின் விருப்பங்களைத் தெரிந்து கொண்டால் மட்டுமே நிலையான தீர்வை ஏற்படுத்தமுடியும்.

அளவிடுகை மூலம் மக்களின் விருப்பங்களை அறிந்துகொள்ளமுடியும். இந்த அளவிடுகை சமாதா முயற்சி தொடர்பில் மக்களின் அபிப்பிராயத்தைத் தெளிவாக வெளிப்படுத்தும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

21 மாவட்டங்களில் 3500 பேரிடம் பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் இந்த அளவிடுகை தயாரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க உதவி நிறுவனத்தின் நிதி உதவியுடன் இந்த அளவிடுகை தயாரிக்கப்பட்டது.

நடைமுறை சமாதான முன்னெடுப்பு தொடர்பாக, மக்கள் மத்தியில் காணப்படும் அபிப்பிராயங்களை அறியும் வகையில் இந்த அளவிடுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த அளவிடுகைமூலம் சமூகங்களுக்கிடையில் நம்பிக்கை கட்டிவளர்க்கப்படவேண்டிய தேவை இருப்பதாகவும், சமாதான நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களுக்குப் போதுமான அறிவூட்டல் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

# அன்னையர் முன்னணியின் விசேட கருத்தரங்கு

(கொழும்பு)

அன்னையர் முன்னணியின் விசேட கருத்தரங்கொன்று - எதிர்வரும் 19 ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ்.முனியப்பர் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 1996/1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காணாமல் போனவர்களின் தந்தையர்களையும், அன்னையர் முன்னணி அன்னையர்களையும் கலந்து கொள்ளும்படி, அன்னையர் முன்னணித் தலைவி கனகாம்பிகை கேட்டுள்ளார்.

இந்தக் கருத்தரங்கில் ஜனாதிபதியைச் சந்திப்பதற்காக, மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்குக் கடிதம் கையளித்த விடயம் தொடர்பாகவும், காணாமல் போனவர்களைப் படையினர் தாம் கைது செய்யவில்லையென அரச சட்டத்தரணி மூலம் வெளிப்படுத்தியதை - ஊடகங்கள் மூலம் தெரிந்தும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வாளாவிருப்பது தமிழர்களுக்குச் செய்யும் துரோகம் எனத் தீர்மானித்து, மறியற்போராட்டம் செய்ய இருப்பது பற்றியும், 1996 ஆம் ஆண்டு கைதான மாநகரசபை ஊழியர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படாதிருப்பது தொடர்பாக மாநகரசபை ஆணையாளருக்குக் கடிதம் அனுப்பியிருப்பது சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படவிருக்கிறது.

# சாருக்கான் குழுவினரை மீண்டும் இலங்கைக்கு அழைக்க வேண்டும்

## ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

சாருக்கானை மீண்டும் இலங்கைக்கு அழைத்து உபசரித்து, குண்டு வெடிப்பால் இலங்கையின் நற்பெயருக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தை துடைக்கவேண்டும் என்று ஜே.வி.பி. கோரியுள்ளது.

இது தொடர்பாக ஜே.வி.பி. விடுத்துள்ள அறிக்கையில் - இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான உறவை சீர்குலைக்கவேண்டும் என்பதில் விடுதலைப்புலிகளும் மிகுந்த ஈடுபாடு காட்டியவர்கள்.

அதேபோல் விடுதலைப் புலிகளை தாஜா பண்ணுவதற்கு அரசியலில் தோற்கடிக்கப்பட்ட சில கட்சிகளின் பின்னணியுடனேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சாருக்கான் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியொன்றில் -இலங்கையில் நடைபெற்ற சம்பவம் எதிர்பார்க்க முடியாத நிகழ்வு என்றும், இனிமேல் இலங்கையின் பக்கம் தலைவைத்தும் படுக்கமாட்டேன் என்றும் தெரிவித்தார்.

ஆகவே சாருக்கான் உட்பட ஏனைய திரை நட்சத்திரங்களை நல்லதொரு சூழ்நிலையில், மீண்டும் இலங்கைக்கு அழைத்து, இலங்கையர்கள் - தீவிரவாதிகளோ, மதவாதிகளோ அல்ல என்பதை அவர்களுக்கு வெளிப்படுத்தவேண்டும்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற சம்வத்துடன் தொடர்புடையவர்களைத் தண்டிக்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 10 ஆயிரம் ஓட்டங்களை கடக்கும் சந்தர்ப்பத்தை இழந்தார் ரிச்சட்சன்!

(வெலிங்டன்)

நியூஸிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரராக இருந்து ஓய்வுபெற்ற மார்க் ரிச்சட்சனுக்கு அதிஷ்டம் கைகொடுக்கவில்லை. முதற்தரப் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங்களை கடக்கவேண்டும் என்ற அவரது ஆசை ஆறு ஓட்டங்களால் பறிபோனது.

நியூஸிலாந்து அணியின் தொடக்க ஆட்டக்காரர் மார்க் ரிச்சட்சன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து சமீபத்தில் ஓய்வு பெறுவதாக அறிவித்தார். முதற் தரப்போட்டிகளில், அவர் தனது கடைசி ஆட்டத்தில் நேற்றுமுன்தினம் பங்கேற்றார். கான்டர்பரி அணிக்கு எதிராக ஒக்லாந்து அணி சார்பில் அவர் களமிறங்கினார். வெலிங்டனில் நடந்த இந்தப் போட்டிக்கு முன்னதாக முதற்தரப் போட்டிகளில் அவரது ஓட்டங்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 959 ஆக இருந்தது.

கூடுதலாக 41 ஓட்டங்கள் எடுத்தால் முதற்தரப் போட்டிகளில் 10 ஆயிரம் ஓட்டங் களைக் கடக்கும் வாய்ப்பு அவருக்கு இருந்தது. எப்படியும் 10 ஆயிரம் ஓட்டங்களைக் கடக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் ரிச்சட்சன் களமிறங்கினார். ஆனால், முதல் இனிங்சில் 35 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அவரது கஷ்டகாலம் ஒக்லாந்து அணி இரண்டாவது இனிங்ஸ் ஆடாமலேயே இனிங்ஸ் தோல்வியடைந்தது. கான்டர்பரி வெறும் 6 ஓட்டங்களால் 10 ஆயிரம் ஓட்டங்கள் என்ற இலக்கை இழந்தார்.



உதைபந்தாட்ட வீரர்களுக்கான விருது வழங்கும் விழா ஜப்பானியத் தலைநகர் ரோக்கியோவிலுள்ள யோகோஹமா நகரில் நடைபெற்றது. இதில் பிரேசில் வீரர் எமர்சனுக்கு தங்கக் காலணி விருது கிடைத்தது.

# நியூஸிலாந்து வீரர் ஹரிஸுக்கு தோள்பட்டையில் சத்திரசிகிச்சை!



நியூஸிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரரான கிறிஸ் ஹரிஸ் தோள்பட்டையில் ஏற்பட்ட காயத்தால் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்படவுள்ளார்.

கடந்த வாரம் அவுஸ்ரேலிய அணியுடன் சிட்னியில் நடைபெற்ற ஒருநாள் போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்தபோது ஹரிஸுக்கு வலது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது.

இந்தக் காயத்தால் அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது. இதனால் அவர் நான்கு அல்லது ஐந்து வாரங்கள் போட்டிகளில் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் ஹரிஸ் நியூஸிலாந்து - இலங்கை அணிக்கு எதிராக நடைபெறவுள்ள போட்டியில் ஆடமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

## விளையாட்டு

# பாகிஸ்தான் – அவுஸ்ரேலியா மோதும் முதல் டெஸ்ட் இன்று!



பாகிஸ்தான் - அவுஸ்ரேலியா அணிகளுக்கிடையேயான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்சமாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. இன்று இரு அணிகளும் மோதும் முதல் டெஸ்ட போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்காக இரு அணிகளும் தீவிரபயிற்சி மேற்கொண்டு வருகின்றன.

முன்னதாக உள்ளூர் அணியுடன் நடந்த இரண்டு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் மோசமாகத் தோற்றது. இருந்தாலும் பாகிஸ்தான் அணியை குறைத்து மதிப்பிட முடியாது என அவுஸ்ரேலிய அணியின் துணை கப்டன் கில்கிறிஸ்ட் பேட்டி அளித்துள்ளார்.

பாகிஸ்தானின் இன்சமாம் மற்றும் யுகானா ஆகியோர் நிலைத்து ஆடினால் ஆட்டத்தின் போக்கு மாறிவிடும் என்பதால் இவர்களுக்காக புது வியூகம் ஒன்றை அவுஸ்ரேலிய அணியினர் வகுத்துள்ளனர்.

பயிற்சி மோதல்களில் கிடைத்த தோல்வி, பாகிஸ்தான் அணியை விரக்தியில் தள்ளியிருக்கிறது. இருந்தாலும் நடக்கவிருக்கும் முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்ரேலிய



அணிக்கு சோதனை கொடுக்க முடியும் என அவர்கள் நம்புகின்றனர்.

டெஸ்ட் போட்டி முடிந்த பின்னர் முத்தரப்பு கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான் மோதவுள்ளது.

இதில் அவுஸ்திரேலியா, மேற்கிந்தியத்தீவு அணிகள் மோதும்.

# தென்னாபிரிக்க அணியுடனான போட்டியில் இங்கிலாந்து தோல்வி!



தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் இங்கிலாந்து கிரிக்கெட்அணி அந்த நாட்டு 'ஏ' அணியுட்னான பயிற்சி ஆட்டத்தில் 7 விக்கெட்டுக்களால் தோல்வியடைந்தது.

நான்கு நாள் பயிற்சி ஆட்டத்தில் - முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 225 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களை



யும் இழந்த அதேவேளை இரண்டாவது இனிங்சில் 190 ஓட்டங்களை மட்டும் பெற்ற நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதேவேளை தென்னாபிரிக்க 'ஏ' அணி முதல் இனிங்ஸில் 281 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

135 ஓட்டங்களை இரண்டாவது இனிங்ஸில் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இறுதிநாள் ஆட்டத்தை ஆரம்பித்த தென்னாபிரிக்க 'ஏ' அணிக்கு ஆரம்பத்தில் மழை சவாலாக இருந்தது.

தாமதமாகப் போட்டி ஆரம்பித்த போதும் 30 ஓவர்களிலேயே 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 135 ஓட்டங்களை எடுத்து இங்கிலாந்து அணியை 7 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்க 'ஏ' அணி தோற்கடித்தது.

தென்னாபிரிக்க 'ஏ' அணியுடன் பயிற்சி ஆட்டத்தில் இங்கிலாந்து அணிக்கு படுதோல்வி ஏற்பட்ட நிலையில் டெஸ்ட் போட்டிகளில் அது நெருக்கடிகளை எதிர்கொள்ளலாம் எனக் கருதப்படுகிறது.



## இங்கிலாந்துடனான முதலாவது டெஸ்ட்:

# தென்னாபிரிக்காவின் போயே விளையாடுவது சந்தேகம்!

வொகன் தலைமையிலான இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகிறது. முதல் டெஸ்ட் போட்டி நாளை போர்ட் எலிசபெத்தில் ஆரம்பமாகவுள்ளது.

தென்னாபிரிக்க அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவரும் துணைக்கப்டனுமான நிக்கி போயே இந்த டெஸ்ட்டில் ஆடுவது சந்தேகம் எனத் தெரிவிக்கப்படுகிறது. காலில் ஏற்பட்ட காயம் முழுமையாக குணமடையாததே இதற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

# பங்களாதேஷுடனான 2 ஆவது டெஸ்ட்; இளம் வீரர்களுக்கு இந்தியா வாய்ப்பு!

## டெண்டுல்கருக்கு ஓய்வு



தினேஷ் கார்த்திக்

பங்களாதேஷ் அணிக்கெதிராக இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இந்திய அணியில் இளம் வீரர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

கங்குலி தலைமையிலான இந்தியக் கிரிக்கெட் அணி, பங்களாதேஷில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளது. டாக்காவில் நடந்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 140 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரண்டாவது மற்றும் கடைசி டெஸ்ட் சிட்டாகொங் நகரில் நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்தப் போட்டிக்கான இந்திய அணியில் இளம் வீரர்கள் சிலருக்கு வாய்ப்பளிக்கப்படவிருப்பதாக கப்டன் கங்கூலி கூறினார்.



பால், குருச்சரண்சிங் போன்ற இளம் பந்தவீச்சாளர்கள் இந்திய அணியில் இடம் பிடித்துள்ளனர். இவர்களை பரிசோதிக்க கப்டன் கங்கூலி முடிவு செய்திருப்பதாகத் தெரிய வருகிறது. ஆனால் வாய்ப்பு வழங்கப்படும் வீரர்கள் பற்றி கங்கூலி கருத்துத் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இதுபற்றி அவரிடம் கேட்டபோது -

மற்றைய வீரர்களுடன் இது குறித்து பேசி வருகிறேன். போட்டி நாளன்று இந்த விடயம் தொடர்பான முடிவு அறிவிக்கப்படும் என்றார்.

பார்த்திவ் பட்டேலின் இடத்தைப் பிடித்துள்ள தமிழக விக்கெட் கீப்பர் தினேஷ் கார்த்திக் துடுப்பாட்டத்திலும் ஓரளவு தனது திறமையை நிரூபித்துவிட்டார். எனவே இந்திய அணியில் அவருக்கு இனி நிரந்தர இடம் கொடுக்கப்பட வாய்ப்புள்ளது. ஒரு நாள் போட்டிக்கான அணியில் விக்கெட் காப்பாளராக டோனி இடம்பிடித்துள்ளார்.

இவரும் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதால் தினேஷ் மற்றும் டோனி ஆகியோருக்கிடையே தற்போது கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. டெஸ்ட் போட்டியிலும் இளம் வீரர்களை பரிசோதிக்க இந்திய அணி நிர்வாகம் முடிவு செய்திருக்கிறது.

அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் பாகிஸ்தான் அணி இந்தியா வருகிறது. இந்தப் போட்டிக்கு வலுவான வீரர்களை தேர்வு செய்யும் நோக்கில் இந்த முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இதேவேளை சச்சின் டெண்டுல்கருக்கு இரண்டாவது டெஸ்ட்டில் ஓய்வுவழங்கப்படும் என்று பங்களாதேஷ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



கட்டாரிலுள்ள டோஹா நகரில் அராபியன் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் நடைபெற்ற போட்டியில் ஓமான் அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அரபு குடியரசு அணியைத் தோற்கடித்தது. ஐக்கிய அரபு குடியரசு வீரர் யூசுப் யாஹயாவும் (இடது) ஓமான் வீரர் காலியும் (வலது) பந்துக்காக மோதுகின்றனர்.

# கூட்டுறவு நகர் பல்பொருள் அங்காடி வைபவ ரீதியாகத் திறந்து வைப்பு!

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நகர் பல்பொருள் அங்காடி நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

பல்வேறு வசதிகளையும் நுவர்வோருக்கு ஒரே கூரையின் கீழ் வழங்கக்கூடிய வகையில் இந்தப் பல்பொருள் அங்காடி அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சூ.சிறில் தலைமையில் நடைபெற்ற இந்த திறப்பு விழா நிகழ்வில் - நல்லை ஆதீன முதல்வர், யாழ். பள்ளிவாசல் மௌலவி அலாவுதீன், தென்னிந்திய திருச்சபை போதகர் இராஜ்குமார், யாழ். மாவட்ட நடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன், தெல்லிப்பளை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் சிவமகாராசா ஆகியோர் மங்கள விளக்கை ஏற்றி வைத்தனர்.

கூட்டுறவு நகரின் பல்வேறுபட்ட பிரிவுகளையும் முக்கிய பிரமுகர்கள் திறந்து வைத்தனர். கூட்டுறவு நகரை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.மோகனதாஸும், மருந்தகத்தை மக்கள் வங்கியின் யாழ். பிரதான வீதி கிளை முகாமையாளர் ஹென்றியும், கூட்டுறவுப் பதிப்பகத்தை யாழ். வர்த்தக சங்க உப தலைவர் ஜெயராஜும், கூட்டுறவு வங்கியை யாழ். மாவட்ட கூட்டுவுச் சபையின் இயக்குநர் சபை உறுப்பினர் சபா தியாகராஜாவும், தொலைத தொடர்பகத்தை சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் சிவசுப்பிரமணியமும், உணவகத்தை திருமதி சொலமன் சிறிலும் வைபவரீதியாகத் திறந்து வைத்தனர்.

## ஒளிவிழா

சங்கானை பிரதேச செயலகத்தில் நாளை காலை 10 மணியளவில் ஒளிவிழா நிகழ்வு நடைபெறவுள்ளது.

பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திலேயே இந்த ஒளிவிழா நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன.

இந்த நிகழ்வுகளில் கிறிஸ்தவர்களின் பல கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளமையால் ஆர்வலர்கள் கலந்துகொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (207)

## வல்லிபுர கோவிலில் பாவை நோன்பு

பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானத்தில் ஆண்டு தோறும் இடம்பெற்றுவரும் பாவை நோன்பு இன்று ஆரம்பமாகின்றது.

ஒரு மாதகாலமாக இடம்பெறும் இந்த நோன்பில் முதல் நாள் ஒரு பாடல் என அதிகரித்து முப்பது நாட்களும் ஆண்டாள் அருளிய திருப்பாவை ஓதப்படும்.

இடையில் வரும் ஞாயிற்றுக் கிழமை அதிகாலையில் சக்கரத் தாழ்வாரும், ஸ்ரீ ஆண்டாளும் உள் வீதியுலா எழுந்தருளுவர். ஏனைய நாட்களில் காலை 5 மணிக்கு விசேட பூஜைகள் இடம்பெறும். (20)








யாழ்.பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் கூட்டுறவு நகர் பல்பொருள் அங்காடியின் திறப்பு விழா நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் சூ.சிறில் உரை நிகழ்த்துவதையும், துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் நாடாவை வெட்டி பல்பொருள் அங்காடியைத் திறந்துவைப்பதையும், தொலைத்தொடர்பகம், உணவகம் ஆகியவற்றின் முகப்புத் தோற்றத்தையும் படங்களில் காணலாம்.

# தலைமைத்துவப் பண்பும் ஆளுமையும் சிறுவயதிலிருந்து ஊட்டப்படவேண்டும்

## கொழும்பு வர்த்தக வங்கி அதிகாரி இராகவன்

(யாழ்ப்பாணம்)

ஒரு மனிதனின் விருத்தியில் ஆரம்பக் கல்வி என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும். சிறந்த ஒரு ஆரம்பக் கல்வியை, அத்திவாரத்தை பிள்ளைகளுக்கு வழங்குவதில் ஆசிரியர் மற்றும் பெற்றோர்களது பங்கு மிகவும் அளப்பரியதாகும்.

தலைமைத்துவப் பண்புகள் மற்றும் சமூக விழுமியங்கள் என்பன சிறுவயதிலிருந்தே பிள்ளைகளிடம் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். அவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தும் போது அவர்கள் மிகச் சிறந்தவர்களாக உருவாகுவார்கள்.

மாறாக எப்பொழுதும் மட்டம் தட்டி வளர்ப்போமானால் அவர்களால் சிறந்த ஆளுமையுள்ளவர்களாக வளரமுடியாது போகலாம்.

எனவே, எமது பெற்றோர்களோ அன்றி ஆசிரியர்களோ பிள்ளைகளது ஆர்வத்தை அவர்களது முயற்சிகளை இதெல்லாம் உனக்குத் தேவையற்றது எனக் கூறி தட்டிவிடுவது நல்லதல்ல என்று கொழும்பு வர்த்தக வங்கியின் சர்வதேசப் பிரிவில் தலைமை அதிகாரியாக பணிபுரியும் செல்வரத்தினம் இராகவன் தெரிவித்தார்.

அண்மையில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் -

இன்று சூழலானது முற்றிலும் வேறுபட்டுள்ளது. சிறுவர்கள் பல சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

தரம் ஒன்றுக்கான பாடசாலை அனுமதி தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை என சிறுவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் நீண்டு செல்கின்றன. சூழலில் ஏற்படும் சவால்கள், மாற்றங்களுக்கு முகங்கொடுத்து வெற்றியடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் சிறுவர்கள் செயற்படும்போது - அவர்கள் பல உடல், உள உபாதைகளுக்கு உட்பட்டு விடுகின்றனர்.

உதாரணமாக இன்று சிறுவர்களில் பலர் குடல்புண், வாய்ப்புண் போன்றவற்றுக்கு உள்ளாவது அதிக அளவில் அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்கு மன அழுத்தம் பிரதானமான ஒரு காரணி என வைத்தியர்கள் கூறுகின்றர்.

எமது சிறுவர்கள் சிறுவயதில் இருந்தே இத்தகைய அழுத்தங்களுள் அழுத்தப்பட்டபடி தமது வாழ்கையை ஆரம்பிப்பது எந்த அளவுக்கு சாதகமானதாக இருக்கும்? சிறுவர்கள் போதுமான விளையாட்டுக்களில் ஈடுபடவோ அல்லது தேவையான உடற்பயிற்சிகளில் ஈடுபடவோ நேரமில்லாத படி வகுப்புக்கள், பிரத்தியேக வகுப்புக்கள் என அவர்கள் இயந்திரங்களாக இயங்கி வருகின்றனர்.

இதன் காரணமாக அவர்கள் சிறு வயதில் இருந்தே மன அழுத்தங்களுடனேயே வளரவேண்டியுள்ளது. இந்த நிலையில் அவர்களிடையே மனவலிமையை எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்?

சாயிபாபாவின் மேற்பார்வையில் இயங்கும் கல்லூரிகளில் மாணவர்கள் சமுதாய நலன் சார்ந்த கல்வி முறைகளிலேயே வளர்த்தெடுக்கப்படுகின்றனர். இதனடிப்படையில் சிறுவர்களது மன ஆரோக்கியம், உடல் ஆரோக்கியம் என்பன இணைந்த வகையில் கட்டியெழுப்பப்படுகின்றது.

இதற்கு வசதியாக தியானம், யோகாசனம், உள்ளிட்ட விழுமியங்கள்சார் கல்வி என்பன இணைந்த பாடநெறிகளிலேயே பிள்ளைகள் வளர்த்தெடுக்கப்படுகின்றார்கள்.

நாமும் எமது சிறுவர்களை தியானம், யோகாசனம் போன்ற உள ஆரோக்கியம் தரும் பயிற்சிகளில் ஈடுபடுத்தி வளர்க்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.(31)

## ஆன்மீக சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக் கிழமை தோறும் நடைபெறும்வரும் சொற்பொழிவுத் தொடரில், நாளை வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு 'வாசகரும், வாசகமும்' எனும் பொருளில் இளைப்பாறிய அதிபர் எஸ்.செல்லத்துரை சொற்பொழிவாற்றவுள்ளார். அன்றையதினம் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய ஆசிரியை சுகன்யா சிவானந்தனின் பண்ணிசையும் இடம்பெறவுள்ளது.

## இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை மூன்று



பெயர் : பா.ஜதுர்ஷா
முகவரி : புலோலி மேற்கு.

அகவை ஏழு



பெயர் : ப.ஹேமரூபன்
முகவரி : பருத்தித்துறை.

அகவை ஏழு



பெயர் : கு.குகஷாந்
முகவரி : வதிரி.

# சின்னஞ்சிறு செய்திகள்

## பாவை நோன்பு நூல் இலவச விநியோகம்

பருத்தித்துறை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான பெரியாழ்வார் ஆசிரமத்தால் பாவை நோன்பு நூல் இலவசமாக விநியோகிக்கப்படுகிறது.

மார்கழி மாத திருப்பாவை நோன்பை முன்னிட்டு ஆண்டார் அருளிய திருப்பாவை, ஸ்ரீரங்கநாதரைத் துயிலுணர்த்தும் திருப்பள்ளியெழுச்சி போன்றவை அடங்கிய பாவை நோன்பு என்னும் நூல் - பெரியாழ்வார் ஆசிரமத்தால் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது. அடியார்கள் இவற்றை ஆசிரமத்தில் பெற்றுக்கொள்ளலாம் என நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (20)

## விண்ணப்பம் கோரப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையால் சாரதி, காப்பாளர், பொறிவலர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படவில்லை என்று வடபிராந்திய போக்குவரத்து சபையின் பொதுமுகாமையாளர் க. கணேசபிள்ளை தெரிவித்தார்.

பொதுமக்கள் வதந்தியை நம்பி விண்ணப்பங்களை அனுப்பவேண்டாம் என்று கேட்டுள்ளார்.

## சிகை ஒப்பனை நிலையங்கள் திறக்கப்படும்

கிறிஸ்மஸ், புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும், 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் அனைத்து சிகை ஒப்பனை நிலையங்களும் திறக்கப்படும் என்பதுடன், 18 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 01.01.2005 சனிக்கிழமை வரை நேரக்கட்டுப்பாடும் நீக்கப்பட்டுள்ளது என சிகை ஒப்பனையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

## பாடசாலை மட்டத்திலான திட்டமிடல் பயிற்சிப் பட்டறை

எதிர்வரும் 2006 ஆம் ஆண்டிலிருந்து பாடசாலை மட்டங்களில் இருந்து தயாரிக்கப்படும் செயற்படு திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படவுள்ளதால், அவை தொடர்பான விளக்கமளிக்கும் பயிற்சிப் பட்டறை ஒன்று, தென்மராட்சி வலய பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு எதிர்வரும் 19, 24, 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறைக்கு ஒவ்வொரு பாடசாலையினதும் அதிபர் உட்பட உப அதிபர் அல்லது சிரேஷ்ட ஆசிரியர் ஒருவர் என இருவரைக் கலந்துகொள்ளுமாறும், ஆயிரம் மாணவர்களுக்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து அதிபர் உள்ளிட்ட உப அதிபர் அல்லது சிரேஷ்ட ஆசிரியர் இருவர் என மூன்று பேர் கலந்துகொள்ளமுடியும் எனவும் வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (31)

## கடற்தொழிலாளர்களுக்கான பொதுக்கூட்டம்

பொன்னாலையைச் சேர்ந்த - பொன்னாலையில் வசிக்கும் அல்லது வேறு இடங்களில் இடம்பெயர்ந்து வசிக்கும் கடற்தொழிலாளர்களுக்கான பொதுக்கூட்டம் ஒன்று நாளை காலை 11 மணிக்கு பாணாவெட்டி சமுத்திரா முகாமில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை உறுப்பினர் தெரிவு மற்றும் மீனவர் பிரச்சினைகள், எதிர்கால நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடவிருப்பதால் சம்பந்தப்பட்ட அனைத்து மீனவர்களையும் கூட்டத்தில் பங்குபற்றுமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (207)

## வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் : ----------

முகவரி : ----------

பிறந்த ஆண்டு : ----------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

----------
பெற்றோர் ஒப்பம்




# யாழ்.குடாநாட்டில் – பண்ணையில் இறால் வளர்ப்புக்கான இடத்தேர்வு சம்பந்தமான கள ஆய்வு அறிக்கை

போரூட், அக்வா சேர்விஸ் நிறுவனங்களின் அனுசரணையுடன் – 'பண்ணையில் இறால் வளர்ப்பு' பற்றிய செயலமர்வு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் கடல்வள அபிவிருத்தி நிலையத்தால் அண்மையில் நடத்தப்பட்டது. இதில் ஒரு பகுதியாக யாழ்.குடாநாட்டில் – பண்ணையில் இறால் வளர்ப்புக்கு ஏற்ற இட மேற்பார்வை செய்யும் நோக்குடன், நிபுணர் குழு குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களைப் பார்வையிட்டது.

பார்வையிடப்பட்ட பல பிரதேசங்கள் இறால் வளர்க்கக் கூடிய பிரதேசங்களாக இருந்த போதிலும், சில இடங்கள் பின்விளைவுகளால் பாதிக்கப்படக் கூடியனவாக இருந்தன. இந்த இடத் தெரிவின் போது, நிபுணர்குழு வழங்கிய விளக்கங்களை ஆதாரமாகக் கொண்டு, இறால் வளர்ப்புக்கு பொருத்தமான பொருத்தமற்ற காரணிகளைத் தொகுத்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

பண்ணையில் இறால் வளர்ப்புக்கான இடத்தேர்வுக்காக பின்வரும் பிரதேசங்கள் பார்வையிடப்பட்டன.

1. ஒட்டுமடம் (ஆனைக்கோட்டைபாலம் முன்புறம்).
2. காக்கைதீவு.
3. கல்லுண்டாய்வெளி (வழுக்கியாற்றுப் பாலம்).
4. அராலி தெற்கு, செட்டியார் மடம் ( அராலித்துறை).
5. காரைநகர்.
6. குருநகர்.
7. வல்லைவெளி.
8. மண்டான்.
9. தும்பளை கிழக்கு.

1. ஒட்டுமடம் (ஆனைக்கோட்டை பாலம் முன்புறம் – வலிகாமம் மேற்கு, உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள ஆனைக்கோட்டையின் ஒட்டுமடம் கோம்பையன் மணல் மயானத்துக்கு முன்புறம் உள்ள பாலத்துக்கு அருகில் உள்ள தடாகமும், அங்குள்ள நிலப்பிரதேசமும் பார்வையிடப்பட்டது.

இந்தப் பிரதேசம் – இறால் வளர்ப்பதற்கு பொருத்தமற்ற பிரதேசம் என தீர்மானிக்கப்பட்டது. பின்வருவன காரணங்களாகத் தெரிவிக்கப்பட்டன.

இந்தப் பிரதேசம் தனியாருக்கு சொந்தமான நிலமாகக் காணப்படுவதுடன், போதியளவு நிலப் பிரதேசம் இருக்கவில்லை.

அருகில் நெருக்கமான குடியிருப்புகள் காணப்பட்டன.

நீர் பெறும் வசதிகள் மிகக் குறைவாகக் காணப்பட்டது.

பாலத்தின் ஊடாக இரசாயனக் கழிவு நீர் கலப்பதற்கு வாய்ப்புண்டு.

அருகில் கழிவுகள் கொட்டப்படும் பிரதேசமாக்கக் காணப்படுகிறது.

பாதுகாப்புப் பிரச்சினை உள்ளது.

(தொடரும்...)

# அதிக செலவின்றி பயிரிடக் கூடிய கீரைவகை

எமது பிரதேசத்தில் பல வகையான கீரைவகைகள் வியாபாரத்துக்காகவும், வீட்டுப் பயிராகவும் வளர்க்கப்படுகின்றன. கீரைவகைகளை உணவுகளில் சேர்க்கும் பழக்கம் நகர மக்களை விட கிராம மக்களிடம் அதிகளவு காணப்படுகிறது. அதற்கு ஒரு காரணம் – அவை வீட்டுத்தோட்டப் பயிராக இருப்பதே ஆகும்.

கீரைவகைகள் மனித உடலுக்கு அத்தியாவசியமானவை. இறைச்சி வகைகளில் புரதம் அடங்கியுள்ளது. ஆனால் மரக்கறி, பால் மற்றும் கீரை வகைகளைத் தினம்தோறும் உணவுடன் சேர்த்துக்கொள்வதன் மூலமும் புரதச்சத்துக் கிடைப்பதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.




பலருக்கு விட்டமின் ஏ குறைபாடு காணப்படுகிறது. இந்தக் குறைபாட்டைப் போக்குவதற்கு அதிகளவு கீரைவகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

விட்டமின் ஏ அதிகமாக உள்ளடங்கியுள்ள பல கீரைவகைகள் உள்ளன.

அவற்றை வீட்டுத்தோட்டத்தில் பயிரிடுவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். வல்லாரை, பசலி, முருங்கை இலை போன்றவை அவற்றில் சிலவாகும். இவற்றில் முருங்கை இலை கசப்புத் தன்மை கொண்டதாக இருப்பினும், அதிகளவு விட்டமின் ஏ கொண்டது.

**பொன்னாங்காணியில் அடங்கியுள்ள சத்துக்கள் –**

புரதம் – 0.4 கிராம்
சக்ரோ – 1 கிராம்
இரும்புச் சத்து – 3.4 மில்லிகிராம் . விட்டமின்கள் – ஏ, பி, பி2.

**வல்லாரையில் அடங்கியுள்ள சத்துக்கள்**

புரதம் – 0.3
இரும்புச் சத்து – 1.1 மில்லிகிராம்
விட்டமின்கள் – ஏ, பி, பி2,சி.

**முருங்கை இலையில் அடங்கியுள்ள சத்துக்கள்**

புரதப்பொருட்கள் – 0.8 கிராம்.
எண்ணெய்ச்சத்து – 0.5 கிராம்.
இரும்புச்சத்து – 2.0 மில்லிகிராம்.
விட்டமின்கள் – ஏ, பி, பி2, சி.

இந்தக் கீரைவகைகளுடன் வேப்பம் குருத்தும் உணவுடன் சேர்த்துக்கொள்ளக் கூடியதே. இதற்கும் நிறைய மருத்துவ குணங்கள் உண்டு.

சலாது எனப்படும் கீரைவகையை பலர் விரும்பி உண்பதில்லை. உணவு மேசையை அலங்கரிப்பதற்காகக் தக்காளி, வெள்ளரி, டின் மீனுடன் சேர்க்கப்படுகிறது. ஆனால் சலாதில் நிறைய சத்துவகைகள் அடங்கியுள்ளது.

சிறுபிள்ளைகள் கீரைவகைகளை விரும்பி உண்பதில்லை. ஆனால் சிறுவயதிலேயே இவற்றை உண்ணப் பழக்குவதன் மூலம் பல நோய்களைத் தடுத்துக்கொள்ளலாம். மேலும் கீரைவகைகள் அதிக செலவின்றி பயிரிடக்கூடியவையும் ஆகும்.

# பூக்கோவா – உற்பத்தி

கோவாக் குடும்பத்தைச் சேர்ந்த இந்தப் பயிருக்கு சந்தையில் உயர் விலை நிலவுகிறது. இதன் நாற்று மேடைப் பராமரிப்பு, தரை தயாரிப்பும் பின்வருமாறு இருக்கும்.

பூக்கோவாப் பயிர்ச்செய்கைக்கு சிறந்த நீர் வடிப்பு அவசியமாகும். ஒரு



ஏக்கருக்குத் தேவையான நாற்றுக்களைப் பெறுவதற்கு 125 கிராம் விதை போதுமானதாகும்.

தரையை 20 சென்றி மீற்றர் ஆழத்துக்கு உழுது பண்படுத்தவும். இத்தரையில் ஒரு மீற்றர் அகலமான மேடைகளை அல்லது 60 சென்றி மீற்றர் இடைவெளி கொண்ட வரம்புகளை அமைக்கவும். மேடைகளைத் தயாரித்தவுடன், நன்கு உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு போன்ற சேதன உரத்தை மண்ணுடன் கலந்து விடவும். வரம்பு அமைப்பதால், வரம்பை அமைப்பதற்கு முன் சேதனப் பசளையைப் பிரயோகித்து, மண்ணுடன் நன்கு கலக்கவும். மூன்று நான்கு வாரங்களில் நாற்று பிடுங்கி நடப்படும். சிபாரிசு செய்யப்பட்ட இடைவெளி 40x50 சென்றி மீற்றர்.

சிறு போசனைப் பதார்த்தங்களால் குறிப்பாக, மொலிப்பீனம் போன்ற குறைபாட்டால் பூக்கள் குறைவடையக் கூடுமாதலால் இவற்றைக் கரைத்து இலைகளுக்கு விசிறுவது சிறப்பானது.

**பூச்சிகளும் நோய்களும்**

வெட்டுப்புழுக்களின் பிரச்சினை தீவிரமாகக் காணப்படுமானால், நடுகையின் முன் நாற்றுக்களை உரிய பூச்சிநாசினி கரைசல்களுள் ஒன்றில் அமிழ்த்தி எடுத்தல் வேண்டும். சேதம் அவதானிக்கப்பட்டால், பயிரைச் சுற்றி நில மட்டத்துக்குக் கீழுள்ள மண்ணில் காணப்படும் புழுக்களைப் பொறுக்கி அழித்தல் வேண்டும்.

இலையரி புழுக்கள், டயமண்ட்முதுகு, அந்து போன்றவற்றைக் கட்டுப்படுத்த பூக்கோவாவின் இலைகள் நன்றாக நனையும் வண்ணம் உரிய கிருமிநாசினிக் கரைசலை விசிறவும்.

கரிய அழுகல் நோய் - பொதுவாக நீர் வடிப்பற்ற தரைகளிலேயே காணப்படுகிறது. நோயின் ஆரம்பத்தில் இலைகளின் ஓரங்கள் வாடிக் கருக ஆரம்பிக்கும். பின்னர் மத்திய பகுதிக்கும் பரவும். தாக்கத்தின் இறுதியில் இலைகள் உதிர ஆரம்பிக்கும். இதேவேளை - தண்டும் கபிலநிறமாக மாறி அழுகும். தோட்டச் சுகாதாரம், சிறந்த நீர் வடிப்பு, பயிர்ச் சுழற்சி போன்றவற்றால் இந்தநோயைக் குறைத்துக் கொள்ளலாம்.

கோவா மஞ்சள் நோயானது – நாற்று மேடைப் பருவம் முதல் அறுவடை வரை எந்தக் காலத்திலும் தோன்றக் கூடும். வளர்ச்சி குன்றல், தாவரத்தின் ஒரு பக்க இலைகள் மஞ்சள் நிறமடைதல், பயிர் காய்ந்திருத்தல் போன்றன இந்த நோயின் அறிகுறியாகும். தாக்கப்பட்ட பயிர்களை உடனடியாகப் பிடுங்கி அழிக்கவேண்டும்.

**அறுவடை**

பூ உண்டாகி அறுவடையை மேற்கொள்வதற்கு 4-5 கிழமைகள் செல்லும். பால் வெள்ளை நிறமான இறுக்கமான பூக்களுக்கு உயர் விலை கிடைக்கும்.

பூக்களில் நேரடியாகச் சூரிய வெளிச்சம் படும் போது, அவை மங்கலான மஞ்சள் நிறமாக மாறும். இதைத் தவிர்ப்பதற்கு பூக்கள் உருவாகி ஏறக்குறைய ஒரு கிழமைக்குப் பின் மேல் பகுதியில் உள்ள 4-5 இலைகளை ஒன்றிணைத்துக் கட்டி விடவும். அறுவடை காவற் தாழ்த்தப்படும் போது, முட்டைகள் தளர்வடைவதால் அவற்றின் சந்தை விலை குறைவடையும்.

கொண்டு செல்லும் போது, ஏற்படக் கூடிய சேதத்திலிருந்து பாதுகாப்பதற்குச் சில இலைகளுடன் பூக்களை அறுவடை செய்யவும்.

# தொழிலில் வெற்றிபெற சில வழிகள்

- தொழிலில் வெற்றி பெற இலக்கை நோக்கித் தொடர்ச்சியாகச் செயற்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.
- ஆர்வம் என்பது, எப்போதோ தோன்றுவதாக இல்லாமல், தொடர்ச்சியாக இருக்க வேண்டும்.
- மற்றவர்கள் சொல்வதைக் கவனிப்பதற்கும் தனித்திறமை பெற்றிருக்க வேண்டும்.
- தன்நம்பிக்கை என்பது சாதாரணமாகத் தோன்றினாலும், அது வெற்றிக்கு இன்றியமையாத ஒன்று.
- விட்ட தவறை ஏற்றுக் கொண்டு, அதைச் சரி செய்து, அதில் இருந்து கற்றுக் கொள்வதே தோல்வியை வெற்றிபெறச் செய்யும் வழி. இந்தத் தோல்விகளே வெற்றிக்கு அடிப்படை.
- மற்றவர் மனதில் பதியும் படி, புரியும் புன்னகை முதன்மையானது.

## தொழில்மலர்



வெற்றுப் பேனாவால் செய்யப்பட்ட பொருட்கள்



கடதாசியால் செய்யப்பட்டது



த.சிவகுமார்

# தொழிலும் அதேநேரம் கலையும் வளரும் விதம் வித்தியாசமானது

கழிவுப் பொருட்கள் தூக்கி வீசப்படும் இன்றைய சூழலில், எமது மக்கள் இதற்கூடான பயன்களை எதிர்பார்ப்பதில்லை. எல்லாப் பொருள்களின் பயன்பாடும் முடிவடையும்போது அதை இலகுவாகக் குப்பையில் போட்டுவிடுகிறோம். ஆனால் அந்தக் கழிவுப் பொருட்களை எங்கு பார்த்தாலும்,



கடதாச் அட்டையால் செய்யப்பட்ட சிங்கம்

அதில் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு பொருளைச் செய்யலாம் என்று எடுத்து, சேகரித்து, வீட்டில் ஓய்வு நேரங்களில் பல வடிவங்களில் நுட்பமான முறையில் அழகுப் பொருட்களைச் செய்துவரும் த.சிவகுமாரைச் சந்தித்தோம்.

கழிவுப் பொருட்களில் செய்யும் அலங்காரப் பொருட்களின் தார்ப்பரியம் பற்றியும், நவீனத்துவமான இன்றைய உலகில் இவற்றை இலகுவான முறையில் செய்வது பற்றியும் உரையாடியவற்றை வாசகர்களுக்காகத் தருகிறோம்.

திலீபன் வீதி ஊரெழுவில் வசித்து வருகிறேன். ஆரம்பக் கல்வியை வசாவிளான் மத்திய கல்லூரியில் பயின்று கொண்டிருந்தபோது, இராணுவ ஆக்கிரமிப்பில் எனது ஊர் அகப்பட்டபோது, இடம்பெயர்ந்து மட்டுவில் வந்தேன். அங்கு மட்டுவில் மகா வித்தியாலயத்தில் உயர்தரம்வரை கல்வி பயின்று சித்தி பெற்றேன்.

1996 ஆம் ஆண்டு மட்டுவில் ஊரையும் இராணுவம் கைப்பற்றியபோது, இடம் பெயர்ந்து புதுக்குடியிருப்புக்குச் சென்றேன். மன்னார், மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரியில் இடம்கிடைத்து, படித்து, இன்று நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்திலும், தனியார் கல்வி நிறுவனங்களிலும் படிப்பித்து வருகிறேன்.

ஓய்வு நேரமான இரவு வேளையில் தான் எனது வீட்டு வேலைகளையும், ஏனைய வேலைகளையும் முடித்துவிட்டு, கலைப் படைப்புக்களை உருவாக்க ஆரம்பிப்பேன். ஆரம்பகாலங்களில் எனது தந்தை, நுட்பமான வேலைகள் செய்து வந்தார். சீமெந்தில் சிற்பம் செதுக்குவார். இந்தச் சூழலில்தான் எனக்கும் கலை உணர்வு தொற்றிக் கொண்டது. குடும்பச்சுமை இருந்தால், அழகுப் பொருட்களை நேரம் ஒருக்கி யாரும் செய்யமாட்டார்கள். நிறையப்பேர் எதிர்ப்புத் தெரிவிக்கலாம். ஊக்கப்படுத்தாமலும் விடலாம். ஆனால் எனது குடும்பத்தாருக்குக் கலையுணர்வு இருந்ததால்,



சவர்க்காரத்தால் செய்யப்பட்ட அலங்கார உருவங்கள்

என்னை ஊக்கப்படுத்தியும், உதவி செய்து கொண்டும் இருப்பார்கள். மனைவியும் உதவி செய்வார். சமூகச் சூழலும் ஒத்துழைப்பாக அமைந்தால், கலை ஆர்வம் எனக்குள் வேர்விட்டு, கிளைபரப்பி, உயிர் பெற்றது எனலாம்.

எமக்குத் தெரிந்த கலை எல்லோருக்கும் தெரியவேண்டும். கலையில் ஈடுபடும்போது வீணான குடும்பப்பிரச்சினைகள், வேறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு இருக்காது. அத்துடன் இதன்மூலம் எமது அறிவைப் பலப்படுத்தலாம்.



பேனாவால் செய்யப்பட்ட சிவபெருமான்

ஊரில் கழிவுப் பொருட்கள் என்று எதுவுமே இருக்கக்கூடாது. அனைத்தையும் பயன்படுத்தி, மீண்டும் ஏதோ ஒரு வழியில் பயன்பெற வேண்டும். இதனால் வீணான செலவுகள் ஏற்படாது. வெளியில் இருந்து வரும் அழகுப் பொருட்கள் எவ்வளவு விலையாக இருந்தாலும், பணம் கொடுத்து உடனே வாங்கிவிடுகிறோம். ஆனால் அவை அனைத்தும் கழிவுப் பொருட்களில்தான் செய்யப்பட்டவை என்று எங்களுக்குத் தெரிவதில்லை. இது வேதனையாகவுள்ளது.

நான் இதுவரையில் செய்த அலங்காரப் பொருட்களை விற்பனைக்குவிடவில்லை. செய்த பொருட்கள் அனைத்தையும் கொண்டு, கண்காட்சி நடத்தி வருகிறேன். இதற்கு அரச நிறுவனங்களோ, பொது அமைப்புக்களோ உதவவில்லை. நானாக முயற்சிசெய்து, பாடசாலை மாணவர்களுக்குப் பயிற்சிகளை வழங்கி வருகிறேன். அதாவது, கடதாசியைக் கொண்டு, வேறுபட்ட அளவுகளில் வெட்டிப் பல உருவங்கள் செய்தல். இதை மேற்கொள்ளும் போது, சரியான அளவீடு இருத்தல் வேண்டும். ஆகவே மாணவர்கள் கலையையும், கூடவே அறிவையும் வளர்க்கக் கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு.

வேலைக்களைப்பில் வீட்டுக்கு வரும் போது சினமாக இருந்தாலும், எனது கலைப் பொருட்களைப் பார்த்தவுடன் மேலும் மேலும் செய்யத் தூண்டும். இதைப் பார்ப்பவர்கள் விலைக்குக் கேட்பார்கள். நிறையப் பொருட்கள் செய்துவிட்டுத்தான் விற்பனைக்கு விடுவேன், என்று கேட்பவர்களிடம் சொல்லிவிடுவேன். ஒரு பொருளைச் செய்யும் போது, எவ்வளவு செலவானாலும் அதை நான் பெரிதாக எடுப்பதில்லை. ஏனெனில், நல்ல படைப்புக்களை உருவாக்க வேண்டும். வெளிக்கொணர வேண்டும். இவற்றைத் தேவையான நேரம் விற்றுவிடலாம். பெறுமதி இருக்கிறது.

மாணவர்களுக்கு, சிங்க உருவம் ஒன்றை அட்டைப் பெட்டியில் செய்யும் முறையைப் பழக்குவதற்காக 250 இற்கும் மேற்பட்ட அட்டைகளில் வரைந்து மாணவர்களுக்கு விற்றிருக்கிறேன்.

மாணவர்கள் பிரசித்திபெற்ற பெரியவர்களின் உருவங்களைக் கடதாசிகளில் செய்வதற்குப் பழக்குகிறேன். இதன்மூலம் அந்தப் பெரியவர்களைப் பற்றி அறிந்துகொள்ள வழிசெய்கிறது.



வெற்றுப் போத்தலால் செய்யப்பட்ட தேர்

மை தீர்ந்துபோன பேனாக்களை உருக்கி - கடவுள், முனிவர் உருவங்கள் செய்கிறேன். மற்றும் சின்னப் போத்தல்களைக் கொண்டு தேரையும், முடிவடைந்த படச்சுருளைக்கொண்டு சிகரத்தையும் செய்கிறேன்.

கண்பார்க்க கை செய்ததுபோல, பல்வேறு கழிவுப் பொருட்களைப் பயன்படுத்தி, உருவாக்கப்பட்ட நிறையப் பொருட்கள் வீடு முழுவதும் நிறைந்து



வெற்றுப் பேனாவால் செய்யப்பட்ட உருவங்கள்

காணப்பட்டது.

கழிவுப் பொருட்களைப் பலவர்ணம் தீட்டி, மாற்றி வைத்திருந்தது, நம்பமுடியாமல் இருந்தது. எவ்வளவு நேரம் பிடித்திருக்கும், எவ்வளவு பொறுமை தேவைப்பட்டிருக்கும். கலை - களை கட்டி நிற்பது தெரிகிறது. யாரிடமும் குறைவாகவுள்ளபோதும், இவரிடம் முழுவதுமாக மீட்கப்பட்டிருக்கிறது பெருமைக்குரியது. மறைமுகமாக இருப்பது, கலையை அழித்துவிடும் செயலாகும். தொழிலும் அதேநேரம் கலையும் வளரும் விதம் வித்தியாசமானதுதான். பார்க்கின்றபோது தெரிகிறது.

நேர்காணல் - செல்வா

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சங்கானை | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 120/= | 90/= | 100/= | 100/= | 120/= | - | 80/= |
| வெண்டிக்காய் | 60/= | 50/= | 60/= | 50/= | 50/= | 40/= | 60/= |
| உருளைக்கிழங்கு | 80/= | 70/= | 70/= | 80/= | 75/= | 80/= | 100/= |
| கத்தரிக்காய் | 60/= | 70/= | 80/= | 70/= | 65/= | 80/= | 80/= |
| பாகற்காய் | 70/= | 90/= | 100/= | 80/= | 90/= | 100/= | 85/= |
| கரட் | 100/= | 90/= | 100/= | 80/= | 90/= | 120/= | 70/= |
| பீற்றூட் | * | 80/= | 80/= | * | * | * | 65/= |
| முருங்கைக்காய் | * | * | * | * | * | * | * |
| வெங்காயம் | 45/= | 50/= | 60/= | 50/= | 55/= | 60/= | 60/= |
| பச்சை மிளகாய் | 100/= | 50/= | 60/= | 70/= | 60/= | 100/= | 100/= |

# ஏ-9 வீதியில் பத்து மாதங்களில் மட்டும் 164 விபத்துக்களில் 21 பேர் உயிரிழப்பு!

(கிளிநொச்சி)

ஏ - 9 வீதி திறக்கப்பட்டதில் இருந்து கடந்த ஒக்ரோபர் மாதம் வரை இடம்பெற்ற விபத்துக்களில் 43 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்தகால யுத்த நடவடிக்கைகளால் ஏ - 9 வீதியில் மக்கள் போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது. 2002 ஆம் ஆண்டு புரிந்துணர்வு உடன்பாட்டின் பின்னர் இந்த வீதியில் புளியங்குளம் முதல் முகமாலை வரையான வீதிகள் மக்கள் பாவனைக்குத் திறந்து விடப்பட்டதையடுத்து பெருமளவான விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி முதல், 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31 ஆம் திகதி வரை 422 வீதி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 43 பேர் உயிரிழந்துள்ளனர்.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் திகதிமுதல், 2002 டிசம்பர் 31 ஆம் திகதிவரை இடம்பெற்ற 84 விபத்துக்களில் 6 பேர் உயிரிழந்தனர், 45 பேர் காயமடைந்தனர். இக்காலப்பகுதியில் நடந்த விபத்துக்களில் 33 வாகனங்கள் சேதமடைந்தன.

அடுத்து 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற 174 விபத்துக்களில் 16 பேர் உயிரிழந்ததுடன், 105 பேர் காயமடைந்தனர். 53 வாகனங்கள் சேதமடைந்தன.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஒக்ரோபர் 31 ஆம் திகதிவரை இடம்பெற்ற 164 விபத்துக்களில் 21 பேர் உயிரிழந்ததுடன், 108 பேர் காயமடைந்தனர். 35 வாகனங்கள் சேதமடைந்தன.

கடந்த 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடக்கம், 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் வரையான 30 மாதங்களில் 422 விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன. இதில் 43 பேர் உயிரிழந்ததுடன் 258 பேர் காயமடைந்தனர். 121 வாகனங்கள் சேதமடைந்தன.

இந்த விபத்துக்கள் பற்றித் தமிழீழ காவல்துறையின் வீதி போக்குவரத்துப் பிரிவினர் கருத்துத் தெரிவிக்கையில் - சாரதிகள் நிதானமின்மை, அதிவேகமாக வாகனங்களைச் செலுத்துதல் போன்ற காரணங்களாலேயே இவ்வாறான விபத்துக்கள் நிகழ்ந்துள்ளன எனத் தெரிவித்தனர்.

# முத்தையன்கட்டு பிரதான வாய்க்கால் இதுவரை புனரமைக்கப்படவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - முத்தையன் கட்டு பிரதான வாய்க்கால் இதுவரையில் புனரமைக்கப்படவில்லை.

கடந்த ஒரு மாத காலத்துக்கு முன்னர் இந்த வாய்க்கால் தொடர் மழை காரணமாக உடைப்பெடுத்தது. இதனால் கற்சிலைமடு, பெரிய குளவெளி பிரதேசங்களுக்கான நெற்செய்கை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் தெரியப்படுத்தியும், இதுவரையில் எந்தவிதமான முயற்சியும் எடுக்கப்படாமையால், இந்தப் பகுதி விவசாய செய்கை பாதிப்படைந்துள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

# சுகாதாரத் தொண்டர்களுக்கு முல்லைத்தீவில் பயிற்சிநெறி

முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவையாற்றுகின்ற சுகாதாரத் தொண்டர்களுக்கான 9 நாள் பயிற்சி நெறி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை முதல் நடைபெற்று வருகிறது.

இந்தப் பயிற்சிநெறி முல்லைத்தீவு பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜெயகுலராஜா தலைமையில் நடைபெற்று வருகிறது.

போரூட் நிறுவன நிதியுதவியுடன் இந்த மாவட்டத்தில் சேவையாற்றுகின்ற சுகாதாரத் தொண்டர்களுக்கான தாய் - சேய் நலன் பேணல், போஷாக்கு, வருமுன்காப்பு நடவடிக்கை போன்ற விடயங்கள் தொடர்பான பயிற்சி நெறியே வழங்கப்பட்டு வருகிறது.

# ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் கால்நடைகளுக்கான மருத்துவ வசதிகள் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த கால்நடை மருத்துவ வசதியை கால்நடை வளர்ப்போர் பயன்படுத்திக் கொள்ளலாம் என ஒட்டுசுட்டான் பிரதேச கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் சபாரட்ணம் தெரிவித்தார்.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கால்நடை சுகாதார நிலையம் தற்போது ஒட்டிசுட்டான் கமநல சேவை நிலையத்துக்கு மாற்றப்பட்டதை அடுத்து, 4 மருத்துவ சேவை நிலையங்கள் நவீன வசதிகளுடன் இயங்கிவருகின்றன.

எனவே இந்த சுகாதார வசதிகளை கால்நடை வளர்ப்போர் பூரணமாக பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார்.

# சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான கருத்தரங்கு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - சிலாவத்தை பிரதேசத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான கருத்தரங்கு கடந்த 8 ஆம் திகதி சிலாவத்தை பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு - போரூட் நிறுவன வெளிக்கள இணைப்பாளர் குணநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் திட்ட இணைப்பாளர், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## வன்னிப் பதிவுகள்

# வவுனியா - செட்டிகுளம் பிரதேசத்தில் இராணுவத்தினரின் கழிவு பொருட்களால் தொற்று நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம்

(வவுனியா)

வவுனியா - செட்டிகுளம் பிரதேசத்தில் இராணுவத்தினர் கழிவுப் பொருட்களை மக்கள் நடமாட்டமுள்ள பகுதிகளில் கொட்டுவதால் தொற்று நோய்கள் பரவும் அபாய நிலை காணப்படுகிறது.

வவுனியா - செட்டிகுளம் பிரதான் வீதியிலுள்ள சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம், செட்டிகுளம் மகா வித்தியாலயம் ஆகிய பகுதிகளை அண்டிய இடங்களில் இராணுவமுகாம் கழிவுப்பொருட்களைக் கொட்டுவதால் அந்தப் பகுதி துர்நாற்றம் வீசுவதுடன், தொற்றுநோய் ஏற்படும் அபாயமும் ஏற்படுகிறது.

இதைவிட மாங்குளம் மருத்துவமனை வளாகத்தினுள் பொலிஸ நிலையத்தின் கழிவு நீர் தேங்குவதால் அந்தப் பகுதியிலும் துர்நாற்றம் வீசுகிறது.

இதைப் போன்று முகத்தான் குளம் மக்கள் குடியிருப்புகளை அண்டிய பகுதிகளிலுள்ள தனியார் காணி ஒன்றில் முகத்தான் குளம் பொலிஸாரால் பெருமளவு கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டுள்ளமையால், அந்தப் பகுதியில் துர்நாற்றம் வீசுவதுடன், மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகின்றனர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## புதிய நூலகம் திறக்கப்படவில்லை

(மன்னார்)

மன்னார் - அடம்பன் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நூலகம் இதுவரையில் திறந்துவைக்கப்படவில்லை.

இந்தப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட பொது நூலகம் கடந்த 5 மாதமாகியும் இதுவரையில் திறந்துவைக்கப்படாமை குறித்து இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் நூலகம் இன்மையால், 500 இற்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் தமது நூலக அறிவைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## குப்பி விளக்கு தீப்பற்றியதில் சிறுவன் காயம்

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் பகுதியில் குப்பி விளக்கு தீப்பற்றியதில் சிறுவன் ஒருவன் காயமடைந்தான்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை கற்சிலை மடு - மூன்றாம் கண்டப் பகுதியில் இடம்பெற்றது.

வீட்டில் ஒருவரும் இல்லாத சமயத்தில் சிறுவன் ஒருவன் மண்ணெண்ணெய் விளக்குடன் விளையாடியபோது விளக்கு தவறுதலாகத் தீப்பற்றிக் கொண்டதால் இதே இடத்தைச் சேர்ந்த சிவலிங்கம் கிருஷாந்தன் (வயது-2) என்ற சிறுவனே காயமடைந்தான்.

## கடும் மழையால் மிகமோசமாக வீதி சேதம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு வீதி தொடரும் கடும் மழையால் மிக மோசமாகப் சேதமடைந்துள்ளது.

இந்த வீதி மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கற்சிலை மடு பாடசாலை முன்பாக வெள்ளம் வீதியைக் குறுக்கறுத்துப் பாய்வதால் பாரிய குழி ஏற்பட்டுள்ளதுடன், வாகனத்தில் பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

# ஒட்டுசுட்டான் சிறுவர் இல்லத்தில் பயிற்சிநெறியும் கண்காட்சியும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் புனிதபூமி சிறுவர் இல்லத்தில் தொழில்சார் பயிற்சி நெறி ஆரம்ப வைபவமும், கண்காட்சி நிகழ்வும் கடந்த வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெற்றது.

முத்து விவசாயபுரத்திலுள்ள புனிதபூமி சிறுவர் இல்லத்தில் உலக கனேடிய பல்கலைக்கழக சேவை நிறுவனமும், கிராமிய பொருளாதார கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

புனிதபூமி சிறுவர் இல்ல மாணவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - பொதுச்சுடரை ஒட்டிசுட்டான் பிரதேச செயலர் சுபாஜினி, உலக கனேடிய பல்கலைக் கழக சேவை நிறுவன இணைப்பாளர் யசோதரன் ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக்கொடியை புனிதபூமி சிறுவர் இல்லப் பொறுப்பாளர் நவநீதன் ஏற்றிவைத்தார். தொடர்ந்து கண்காட்சி நிகழ்வும் இடம்பெற்றது.

# அடிப்படை வசதியற்ற நிலையில் வவுனியா - பெரியதம்பனை மக்கள்

வவுனியா - பெரியதம்பனை பிரதேசத்தில் 108 குடும்பங்கள் அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா - செட்டிகுளம் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட இந்தக் கிராமத்தில் 108 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இந்தக் கிராமம் இராணுவ கட்டுப்பாட்டுக்கு அண்டிய சூனியப் பிரதேசமாகக் காணப்படுவதுடன், இந்தப் பகுதிக்கான போக்குவரத்து, சுகாதார வசதி போன்ற அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் காணப்படுகிறது.

இதனால் இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் தமது தேவைகளைப் 2 கிலோமீற்றர் தூரமுள்ள வவுனியா நகருக்குப் பயணித்தே தமது தேவைகளை நிறைவு செய்து வருகின்றனர்.



வட்டக்கச்சி - மாயவனூர் மயானத்துக்குச் செல்லும் வீதியை வட்டக்கச்சி கமநல சேவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் புனரமைப்பு வேலைகள் இடம்பெறுவதை படத்தில் காணலாம்.
(வட்டக்கச்சி செய்தியாளர்)





வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஒளிவிழாவில் பங்குத்தந்தை அகஸ்ரீன் அடிகளார் திருப்பலிப் பூசை நடத்துவதை முதலாவது படத்திலும், இந்த நிகழ்வில் 'கிறிஸ்மஸ் விருந்து' என்னும் நாடகத்தின் ஒரு காட்சியை இரண்டாவது படத்திலும் காணலாம்.
*(படம் - வட்டக்கச்சி, இராமநாதபுரம் செய்தியாளர்கள்)*

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

பிறன்பழி கூறுவான் தன்பழி உள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும்

*திருக்குறள்*

# நமது நோக்கு

## இந்திய நலன்நோக்கிய சூரியகுமாரனின் பேச்சு

தென்னாசியப் பிராந்தியத்தில் மூன்றாவது பலம் வாய்ந்த சக்தியாக - கடற்புலிகள் அமைப்பு படிப்படியாக வளர்ந்து வருவதானது, இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு எதிர்காலத்தில் பாரிய அச்சுறுத்தலாக இருக்கும் எனவும், அதனால் அதைத் தடுத்து நிறுத்த இந்தியா உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், இந்திய கலிக்கற் பல்கலைக்கழகப் பேராசிரியரும், கடல் வளக்கற்கைகள் மற்றும் ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்தவருமான சூரியகுமாரன் என்பவர் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

சூரியகுமாரன் அவர்களைப்பற்றி அதிகம் விபரிக்கவேண்டிய அவசியமே கிடையாது. அவர் தமிழ் மக்களின் உரிமை மற்றும் விடுதலைப்போராட்டத்திற்கும், அதனைத் தலைமைதாங்கி முன்னெடுத்துச்செல்லும் விடுதலைப் புலிகளுக்கும் எதிரான கருத்து நிலைப்பாட்டைப் பகிரங்கமாகவே கொண்ட ஒருவராவார். அது மட்டுமல்ல - எந்தக்கட்டத்திலும் இந்திய சார்பு நிலைப்பாட்டை எடுத்துச் செயற்படுவதுடன், இந்திய வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் புலனாய்வுத்துறையினருடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டவராகவும் உள்ளவர் எனக் கருதப்படுவார்.

இவரின் இலங்கை விவகாரம் தொடர்பான சிந்தனை ஒருபோதுமே தமிழ்மக்களின் நலன் நோக்கில் நியாயபூர்வமான கருத்துக்களை உள்வாங்கிச் செயற்பட்டதாக இல்லை. இந்திய - இலங்கை ஆளும்வர்க்கத்தின் நலனை அடிப்படையாகக் கொண்டு தனது இலங்கை இனவிவகாரம் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு, கருத்துக்களைக் கூறுவதில் தீவிரம் காட்டி வரும் சூரியகுமாரனின் எழுத்துக்கள், புத்திஜீவிகள் மட்டத்தில் சலசலப்பை ஏற்படுத்தினாலும், சாதாரண மக்கள் மத்தியில் பெரிய அளவுக்குத் தாக்கத்தை ஏற்படுத்தியது கிடையாது.

எப்படியாயினும் இலங்கைப் பிரச்சினை தொடர்பான இந்திய ஆட்சியாளாரினதும், 'றோ' போன்ற புலனாய்வு அமைப்புகளினதும் கருத்துக்களுக்கு இசைவாக அவர்களின் செயற்பாடுகளை நியாயப்படுத்தும் இவரது எழுத்துக்களும், பேச்சுக்களும் கடந்த இரு தசாப்தங்களுக்கும் மேலாக இலங்கை அரசுக்குச் சார்பாகவும் ஈழத்தமிழர்களுக்கு எதிராகவும் இந்திய பார்ப்பனீயப் பார்வையில் இலங்கை விவகாரத்தை அணுகுவதாகவே இருந்து வந்துள்ளது.

இப்போது இவர் கடற்புலிகள் விவகாரத்தை ஒரு பிரச்சினையாகக் காட்ட முயன்றுள்ளமைக்கும் காரணம் உண்டு. இலங்கையைத் தமது பிடிக்குள் வைத்துக்கொண்டு இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனது மேலாதிக்க வலுவைப்பயன்படுத்த இந்தியா போட்டுவரும் நீண்ட காலத்திட்டத்திற்கு, இலங்கை - அமெரிக்க உறவின் இறுக்கமும், விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பின் தமிழீழ கடற்பரப்பின் மீதான ஆதிக்கக் கட்டுப்பாடும் ஆபத்தாக அமையக் கூடும் என இந்தியா சந்தேகப்படுவது உண்மையாகும். இந்தச் சந்தேகம் இந்தியாவுக்கு பலவருடங்களாக இருந்து வந்துள்ள போதிலும், இந்தச் சமாதான சூழல் உருவானதிலிருந்து அது உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாக இறுகிவிட்டது என்றே கூறவேண்டும்.

நோர்வே நாட்டின் சமாதான அனுசரணைப் பணியின் பின்னால், அமெரிக்காவின் வழிகாட்டல் அல்லது நெறியாள்கை அழுத்தமாக இருப்பதாகவே இந்தியா அச்சப்படுகிறது.

இலங்கைக் கடற்படைக்கான அமெரிக்க போர்க்கப்பல் விநியோகம், அந்நாட்டுக் கடற்படையின் பயற்சி நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்பு உடன்பாட்டுக்கான திட்டங்கள் போன்றவை இந்தியாவுக்குப் பலத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது என்பதில் ஐயமில்லை.

இதனையடுத்து விழிப்படைந்த நிலையிலேயே திருகோணமலைத் துறைமுகம், எண்ணெய்க் களஞ்சியங்கள் மீதான இந்திய - இலங்கை உடன்பாட்டின் அடிப்படையிலான உரிமையைப் பயன்படுத்த இந்தியா விரைந்து செயற்பட்டதுடன், இந்திய - இலங்கைக் கடற்பரப்பில் கூட்டுப் பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்வது குறித்தும் உடன்பாடு காணவும் முயன்றது எனலாம்.

தற்போது தென்பகுதிக் கடற்பரப்பில் நேற்றையதினம் ஆரம்பமான ஒப்பரேஷன் எக்சத் (Operation Eksath) என்ற இந்திய - இலங்கைக் கடற்படைகளின் ஒன்றிணைந்த ஒத்திகைப் பயிற்சி நடவடிக்கை ஆரம்பமாக முன்னர், சென்னையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் 'இந்தியப் பார்வையில் இலங்கையின் சமாதான நடவடிக்கைகள்' என்ற தலைப்பில் ஆய்வுரை வழங்கும் போதே சூரியகுமாரன் கடற்புலிகள் குறித்த கருத்தை வெளியிட்டுள்ளார் என்பதைக் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

கடற்புலிகளின் வளர்ச்சியால் தென்னாசியப் பிராந்தியத்துக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனப் புலம்பியுள்ள சூரியகுமாரன், இந்திய நலன்கருதி - இந்திய அரசு விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அமைப்பின் செயற்பாட்டை முடக்கவேண்டும் என்று ஆலோசனை கூறியுள்ளதுடன், அண்மைக் காலங்களில் இந்திய மீனவர்கள் விடுதலைப் புலிகளின் ஆதரவுபெற்ற மீனவர்களால் வடபகுதிக் கடற்பரப்பில் தாக்கப்பட்டுவருகிறார்கள் என்ற புனைகதையையும் அவிழ்த்துவிட்டுள்ளமையானது, அவரின் உள்நோக்கத்தை வெளிச்சமிட்டுக் காட்டுவதாகவே அமைந்துள்ளது.

இந்திய மீனவர்களின் அத்துமீறல் பாக்குநீரிணையிலும், வடபகுதி கடற்பிராந்தியத்திலும் மோதல்நிலை உருவாகக் காரணம் என்பதை மூடிமறைக்கும் சூரிய்குமாரன் - இதற்கு விடுதலைப் புலிகளை இணைக்க முயல்வது சிண்டுமுடியும் உத்தியின் பாற்பட்டதேயாகும்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா தமிழர்களைப் பகடைக்காய்களாக்கி, தனது அரசியல் மற்றும் இராணுவ அபிலாஷைகளை நிறைவேற்றிக்கொள்ளும் சுயநலத்துடன்தான் தொடர்ந்தும் பிரச்சினைகளை அணுகிவருகின்றது என்பதையே சூரியகுமாரனின் பேச்சு உறுதிசெய்வதாக உள்ளது.

## நாடும் நடப்பும்




# மறவன் மாஸ்ரருக்கு பருத்தித்துறையில் பல நூற்றுக்கணக்கான மக்கள் அஞ்சலி

(பருத்தித்துறை)

கடற்புலிகளின் மூத்த உறுப்பினரான லெப்.கேணல் மறவன் மாஸ்ரரின் வித்துடல் தாங்கிய பேழை நேற்று முன்தினம் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு எழுச்சீபூர்வமாக அஞ்சலி நிகழ்வு இடம் பெற்றது.

பருத்தித்துறை பஸ்தரிப்பு நிலையத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பந்தலில் வித்துடல் தாங்கிய பேழை மக்கள் அஞ்சலிக்காக நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. பொதுச்சுடரை வடமராட்சி கடற்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் அன்பழகனும் ஈகச்சுடரை மறவன் மாஸ்ரரின் மகன் எட்வேட்டும் ஏற்றினர்.

முன்னாள் நகரசபைத் தலைவர் வின்சன் டீ போல் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை தலைவர் சொலமன் சூ சிறில், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், வடமராட்சி கடற் றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் மேலாளர் கங்கையமரன், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை ஊடகப் பேச்சாளர் கனகலிங்கம், அரசண்ணா ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து வடமராட்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் தயா, யாழ்.மாவட்ட துணை அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் மறவன் மாஸ்ரரின் வித்துடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். வடமராட்சி கல்விக்கழக பொறுப்பாளர் அருண் மலரஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து அங்கு கூடியிருந்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் மலரஞ்சலியைச் செலுத்தினர்.

காலை 11.30 மணியளவில் பருத்தித்துறையில் இருந்து 4 ஆம் குறுக்குத்தெரு வழியாக முனை, தும்பளை கிழக்கு, கற்கோவளம் ஊடாக நெல்லியடிக்கு மக்களின் அஞ்சலிக்காக லெப்.கேணல்.மறவன் மாஸ்ரின் வித்துடல் தாங்கிய ஊர்தி புறப்பட்டது.

நேற்று முகமாலை ஊடாக வன்னிக்குக் கொண்டு செல்லப்பட்டு இன்று அவரது சொந்த இடமான தாளையடிக்கு கொண்டுசெல்லப்பட்டு பி.ப. 2 மணிக்கு உடுத்துறை துயிலுமில்லத்தில் வித்துடல் விதைக்கப்படும். (20)

# கைக் குண்டுடன் கைதானவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணை

(கொழும்பு)

கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டரை வருடங்களாக மட்டக்களப்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். வரதர் அணி உறுப்பினரான வடிவேல் எனப்படும் உலக சேகரம் சிவகுமாரை மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

இதற்கான உத்தரவு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நேற்று செங்கலடியில் வைத்து கைக்குண்டுடன் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையில் செல்லுமாறு நீதிமன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்த போதிலும், அந்தத் தொகையைக் குறைக்குமாறு நீதிமன்றத்திடம் மற்றுமொரு மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இதனை ஏற்றுக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் பிணைத் தொகையை ரூபா 25 ஆயிரமாகக் குறைத்து இரண்டு சிவில் அதிகாரிகளின் சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்துள்ளது.

இதேவேளை மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தில் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டு, பிணையில் விடுதலை செய்யப்பட்ட 4 பெண்கள் உட்பட 8 விடுதலைப் புலிப் போராளிகளும் இரண்டாவது தடவையாக நீதிமன்றத்தில் ஆஜரானார்கள்.

கடந்த தவணையின்போது ஆஜராகாத இருவர் சட்டத்தரணி ஊடாக ஆஜரானார்கள்.

இவர்கள் மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி 8 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகவேண்டும் என்று நீதிபதி எம்.எச்.அஜ்மீர் உத்தரவிட்டார்.

இதற்கிடையில் மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா அணியைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான முதலாவது சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவில்லை.

மழை வெள்ளம் காரணமாக களுத்துறை சிறைச்சாலையிலிருந்து இவரை அழைத்துவர முடியாதிருப்பதாக சிறைச்சாலை ஆணையாளர் சமர்ப்பித்த அறிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி இவரது விளக்கமறியலை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை நீடித்தார்.

இரண்டாவது சந்தேக நபரான சிறைச்சாலை உத்தியோகத்தர் தம்பிராஜா அருளம்பலம் மட்டும் ஆஜர்படுத்தப்பட்டார். அன்றைய தினம் வரை இரவது விளக்கமறியலும் நீடிக்கப்பட்டது.

# சமுர்த்தி முகாமையாளர் சங்கத்தின் எட்டாவது தேசிய மகா சம்மேளனம்

(கொழும்பு)

சமுர்த்தி முகாமையாளர்களின் தொழில் உரிமைகளை வென்றெடுப்பதற்கும், நலன்புரி சேவைகளைச் செய்வதற்குமெனச் செயற்படும் அகில இலங்கை சமுர்த்தி முகாமையாளர் சங்கத்தின் 8 ஆவது தேசிய மகா சம்மேளனம் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள றோயல் கல்லூரியின் புதிய கலை அரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு கௌரவ அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, கௌரவ அமைச்சர் லால்கந்த உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் நாட்டிலுள்ள அனைத்து சமுர்த்தி முகாமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி சங்கத்தால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (24)

# பல்கலை மருத்துவ பீட மாணவர்கள் நேற்று முதல் விரிவுரை பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட இறுதியாண்டு மாணவர்களின் சத்திரசிகிச்சை கல்விச் செயற்பாடுகள் கடந்த ஒரு வார காலமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதை ஆட்சேபித்து மருத்துவபீட மாணவர்கள் அனைவரும் தமது கல்விச் செயற்பாடுகளை இடைநிறுத்தி நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

சத்திரசிகிச்சை கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்க பல்கலைக்கழக நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அதுவரை மருத்துவ மாணவர்கள் தமது கலவிச் செயற்பாடுகளை ஆரம்பிக்கமாட்டார்கள் எனவும் மருத்துவபீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக தான் நடவடிக்கை எடுப்பதாகத் துணைவேந்தர் தெரிவித்த போதும் -

இதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும். இல்லையேல் வேறு பல்கலைக்கழகங்களுடன் ஒப்பிடும்போது எமது கல்விக் காலம் நீடிக்கும்.

இதற்கான சுமுக தீர்வு ஒன்று கிடைக்காவிட்டால், யாழ். பல்கலைக்கழகம் முழுவதும் போராட்டத்தை விஸ்தரிக்க நேரிடும் என மருத்துவபீட மாணவர்கள் தெரிவித்தனர்.

வாரநோக்கு...

- யாழவன்

# அ.தி.மு.க.காரர்களாக மாறிவரும் சந்திரிகாவும் அவர் சகாக்களும்

மற்றவர் சொக்கிட நற்றமிழ் தந்த சொக்கன் ஐயாவின் மறைவால், தமிழ் கூறும் நல்லுலகை மீளாத்துயரிலே ஆழ்த்திவிட்டு, கடந்த வாரம் நகர்ந்து சென்றுள்ளது.

தள்ளாத வயதிலும் தமிழ் வளர்த்த தலைமகனை இழந்து, தமிழ்த்தாய் கலங்கி நிற்கும்



வேளையிது. தமிழ்த்துறையின் எத்துறையிலும் அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக அரும்பணியாற்றிய பெருந்தகையின் மறைவு மனதை நெருடுவதாகவே உள்ளது.

இறுதி மூச்சுவரை இலக்கியம் பற்றியும், விழி மூடும்வரை விடுதலைக் கனவையும் நெஞ்சினில் சுமந்த சொக்கனின் மறைவு - ஈடு செய்யப்பட முடியாததே.

ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி அமைதியாக, அதேவேளை ஆணித்தரமாக தமிழ்ப்பணியாற்றிய அவருக்கு - நாட்டுப்பற்றாளர் எனும் உயரிய கௌரவம் வழங்கப்பட்டுள்ளதோடு, இறுதி அஞ்சலி நிகழ்வுகளும் ஒரு வீரவணக்கக் கூட்டம் போலவே நடைபெற்று முடிந்துள்ளன.

பேனாவையும், பேப்பரையும் கொண்டு தமிழ் மொழியின் விடுதலைக்காகப் போராடிய ஒரு மூத்த போராளியாக சொக்கன் ஐயா இன்று பலராலும் மதிக்கப்படுகின்ற நிலையை அடைந்துள்ளார்.

அவருடைய வாழ்வு ஈழத்தமிழ் உலகில் எழுதவும், பேசவும் துடிக்கும் இளைய நெஞ்சங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. வாழும் தமிழ் உலகுக்கு ஒரு கைகாட்டி மரமாகவும், வழிகாட்டியாகவும் வாழ்ந்து மறைந்துள்ளார் அமரர் சொக்கன்.

இறுதிவரை தமிழை நேசித்த ஒரு தேசப்பற்றாளன் எனும் கௌரவத்துக்குரிய அந்த உயர்ந்த மனிதனுக்கு, இந்த மண் செய்யக்கூடிய நன்றிகள் பல கோடியுள்ளன. உண்மையிலேயே ஆத்மார்த்தமான அந்தப் பெரியவரின் மறைவை மனதில் கொண்டால், அவரால் உருவாக்கப் பெற்ற தமிழ்ப் பெயர்களைக் கொண்ட அகராதியிலிருக்கும் நற்பெயர்களைப் பிறக்கப்போகும் எமது பிள்ளைகளுக்குச் சூட்டவேண்டும். அதுவே இந்த மண்ணுள்ளவரை அந்த மாமனிதனுக்கு ஆற்றக்கூடிய நன்றியுணர்வின் வெளிப்பாடாகும்.

சொக்கனின் மறைவு நெஞ்சை நெஞ்சுருக வைத்திருக்கும் வேளையில், சமாதான முயற்சிகள் நோக்கிய அரசின் திருப்பங்களும், தமிழ் மக்களைத் திக்கென வைத்துள்ளது. நோர்வேயின் சமாதானத் தூதுவர் கிளிநொச்சி சென்று வருவதற்கான ஹெலிகொப்டர் வசதிகளை இனி வரும் காலங்களில் வழங்க முடியாது எனும் அறிவிப்பும், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.பி.திஸநாயக்கவின் கைதும், சிறையடைப்பும், இந்திய கடற்படையினருடன் இணைந்து இலங்கைக் கடற்படையினர் பயிற்சியில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகள், நாடாளுமன்றத்திலே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவும், ஐ.தே.கவின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் என அரசு சமாதானப் பாதையை திசை திருப்பும் முயற்சிகளிலேயே தீவிரமாக இறங்கியுள்ளது.

இதிலே சமாதானத் தூதுவர் சொல்ஹெய்மின் வன்னிப் பயணத்துக்கான ஹெலிகொப்டர் வசதி இடைநிறுத்தப்பட்டமையானது - அரசின் முற்றான சமாதான வெறுப்பை வெளிப்படையாகக் காட்டி நிற்கின்றது.

இதுவரை காலமும் இழுத்தடிப்பு முயற்சிகளை மேற்கொண்டு வந்த அரசு - இப்போது நோர்வே மீதும் கைவைத்துவிட்டது. இது நோர்வேயை வெறுப்படையச் செய்து, சமாதான அனுசரணைப் பணிகளில் இருந்து ஓரம்கட்டுவதற்கான முயற்சியாகவே பார்க்கப்படவேண்டியது.

முன்னரும் பல தடவைகள் சந்திரிகா தலைமையிலான அணியினர் - நோர்வேயின் அனுசரணைப் பணிகளைச் சாடி வந்ததோடு, ஜே.வி.பி, ஹெல உறுமய, பிக்குகள் முன்னணி போன்ற இனவாத அமைப்புகள் - இலங்கையிலுள்ள நோர்வே தூதரகம் முன்பாக, அந்த நாட்டு தேசியக் கொடியை எரித்து, உச்சக்கட்ட அநாகரிகத்திலும் ஈடுபட்டனர்.

**ஒரு சிறு குண்டு வெடிப்பே நாட்டின் சுற்றுலாத்துறை வருவாயை மோசமாகப் பாதித்துள்ளதாக கூக்குரலிடும் சக்திகள் - ஒரு உண்மையை உணர மறந்துள்ளனர்.**

**ஒரு சமயம் அரசின் திட்டம் மூலம், நாளை ஈழப்போர் மீண்டும் முனைப்பு பெறுமாயின், அதனால் ஏற்படும் பொருளாதார பின்னடைவுக ளோடு ஒப்பிடும் போது, இப்போது ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சி- புறக்கணிக்கத்தக்கதே. எனவே, அதனைப் பற்றி அதிக சிரத்தை எடுக்கும் அரசு - எதற்காகப் போரை ஆரம்பிக்க துடியாய்துடிக்கிறது என்பது தான் புரியாத விடயமாகவுள்ளது.**

இவர்களது தொடர் எதிர்ப்பு நடவடிக்கைகளாலும், சமாதானப் பணிகளில் அரசு காட்டிய அசிரத்தையும் - சிறிதுகாலம் நோர்வே அரசை அனுசரணைப் பணியிலிருந்து ஒதுங்க வைத்ததை எளிதில் மறந்துவிடமுடியாது.

பின்னர் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சபாநாயகர் தெரிவு மூலமாக, சந்திரிகா அரசுக்குக் காட்டிய எதிர்ப்புணர்வின் விளைவாக, தொலைபேசி மூலமாக நோர்வேக்கு அவசர அழைப்பைச் சந்திரிகா இரவோடிரவாக விடுத்தார்.

உத்தியோகபூர்வ அழைப்பை எழுத்தில் கோரிய நோர்வேயும் அதனைப் பெற்றுக்கொண்டு, தனது பணியை மீண்டும் முன்னெடுத்துச் சென்றது. ஆனால், அதற்கும் இப்போது முட்டுக்கட்டை போட்டுவிட்டார் சந்திரிகா.

சமாதானப் பாதையிலே ஏற்படும் ஒவ்வொரு தடைகளுக்குமான முழுப் பொறுப்பையும், பழியையும் சந்திரிகாவே ஏற்றுக்கொள்ள வேண்டும். வேறு எவர் மீதும் எந்தக் காரணம் கொண்டும் பழியைத் திசைதிருப்பிவிடமுடியாது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவதன் மூலம் இராணுவத்தினர் சமாதானத்துக்கு விளைவிக்கும் கேடுகளுக்கும், சொல்ஹெய்மை வன்னிக்குச் சுமந்து செல்லோம் என விமானப்படை தெரிவிக்கும் விசமத்தனத்துக்கும் முப்படைகளின் பொறுப்பதிகாரி எனும் நிலையிலும், இடைக்காலத் தீர்வின் அடிப்படையிலான பேச்சுக்கு அதிக எதிர்ப்பைக் காட்டிவரும் ஜே.வி.பி - அங்கத்துவம் பெறும் ஆட்சியின் தலைவி என்ற வகையிலும், ஒட்டுமொத்தத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற முறையிலும், சந்திரிகாவே சமாதானப் பாதையைத் திசைதிருப்பி பாதாளத்துக்குச் செல்லும் நிலைக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சொல்ஹெய்மின் பயணத்துக்கான ஹெலிகொப்டர் வசதி பறிக்கப்பட்ட விதத்தை நோக்குகையில், அங்கு பலவித சந்தேகங்கள் தொக்கிக் கிடக்கின்றன. நிதி வசதியைக் காரணம் காட்டி, போக்குவரத்து தடைசெய்யப்பட்டது என்று கூறுவது எந்த விதத்திலும் நியாயமற்றது.

இந்த முயற்சியிலே பொதிந்துள்ள உள்ளார்ந்த நோக்கம் தான் யாது?

விடுதலைப் புலிகளின் பகுதிக்கு உலங்கு வானூர்தியைக் கொண்டு செல்வதற்கு விமானப்படையினர் தயாராகவில்லை. அவர்கள் அச்சப்படுகிறார்கள் எனும் ஒரு நொண்டிச்சாட்டை வெளியுலகுக்குக் காரணங்காட்டி, விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலே யுத்தபீதி தோன்றியுள்ளதாக, சர்வதேச சமூகத்துக்கு விதப்புரை செய்வது ஒரு நோக்காக இருக்கலாம் அல்லது போனால், அரசு என்றுமே கூறி வருவதுபோல விடுதலைப் புலிகளிடமுள்ள விமானப்படை வசதியை வெளியே கொண்டு வருவதற்கான ராஜதந்திர நடவடிக்கையாகவும் இருக்கலாம்.

அதாவது, சமாதானப் பாதையிலே சமபங்காளிகள் எனும் நிலையிலுள்ள விடுதலைப் புலிகள் -சொல்ஹெய்மைக் காவுவது தொடர்பிலும், சமபங்காளிகளாகச் செயற்பட வேண்டும் என அரசு நினைப்பதனூடாக விடுதலைப் புலிகளின் விமானப்படையை வெளியே கொண்டு வருவதற்கு எடுக்கும் தீவிர முயற்சியாகவும் இருக்கலாம்.

இந்த வகையிலே சிந்திக்கத் தோன்றுவதற்கு இன்னும் ஒரு காரணமும் உள்ளது.

அண்மையில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் - வன்னி வந்தபோது, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து வன்னி செல்வதற்கு அவருக்கு வழங்கப்பட்ட ஹெலியும் மிக மோசமடைந்த நிலையிலேயே இருந்தது.

இதனை பாலசிங்கமே தனது லண்டன் மாவீர்தின உரையிலே குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எனவே, இராணுவ பலத்தை துப்பறியும் அரசின் இராஜதந்திர முயற்சியில் இதுவும் ஒன்றாக இருக்கலாம் எனக் கருதுவதற்கு நிறைய வாய்ப்புக்கள் உள்ளவேயுள்ளன.

மறுபுறமான சிந்திப்பின் - நோர்வே அனுசரணையாளர்கள் தமக்கு அரசு வழங்கும் அதிக கௌவரத்தை கண்ணுற்று, அனுசரணைப் பணியிலிருந்து இடை விலக, அதற்கு வேறோர் அர்த்தம் கற்பித்து, போரை மீண்டும் தொடங்குவதும் அரசின் நோக்கமாக இருக்கலாம்.

இவ்வாறு ஏன் சிந்திக்க வேண்டியுள்ளதெனின் கடந்த மாவீர நாளின் போது தேசியத்தலைவரது மாவீரர் உரை தொடர்பாக, இலங்கைக்கான நோர்வேத் தூதுவரிடமும், விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்மிடம் தொலைபேசியிலே தொடர்பு கொண்டு பேசிய ஜனாதிபதி - அவர்களிடம் பிரபாகரன் மீண்டும் போரை ஆரம்பிக்கப் போகிறார். அதனை அவரது உரையின் மூலமாகத் தெரிந்து கொள்ள முடிகிறதல்லவா? என வினவியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த இடக்குமுடக்குக் கேள்விக்கு - நோர்வேத் தூதுவர்கள் அவ்வாறு தமக்குத் தோன்றவில்லையெனவும், அவர் இன்னும் சமாதானத் தீர்வையே விரும்புகிறார் எனவும் தெரிவித்துள்ளனர்.

நோர்வேத் தரப்பின் இந்தப் பதிலால் ஜனாதிபதி மிகுந்த ஏமாற்றமடைந்தார். நோர்வேயின் வாயினூடாகவே புலிகள் போரை ஆரம்பிக்கப் போகிறார்கள் எனும் சொல்லை வரவழைத்து, அதனைச் சர்வதேச ரீதியிலே பிரசாரப்படுத்தி அதனூடாக அமெரிக்கா, இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளிடம் - ஆயுத, இராணுவ, தளபாட உதவிகளைப் பெற்று, போரை முன்னெடுப்பதை நோக்காக ஜனாதிபதி கொண்டிருந்தார். இது நிறைவேறாமல் போனமை வேதனையான விடயமாகவே அவருக்குப்பட்டது.

மேலும் இந்தியாவை இனப் பிரச்சினை விடயத்திலே மூக்கை நுழைக்க வைக்கும் அரச தரப்பின் முயற்சியாகவும், நோர்வேயின் ஓரங்கட்டலை கருதமுடியும். நோர்வேயை அவமதித்து, ஒதுக்க வைத்து அந்த இடத்துக்கு இந்தியாவைக் கொண்டு வந்து, சமாதானத்தை தனக்கு சார்பான வியாபாரமாக்கி, லாபம் தேட முனைகிறார் சந்திரிகா.



அண்டை வீட்டாரான இந்தியாவே தமக்கு அதிக பதிலை அளிக்கும் வல்லமை மிக்கவர்கள் என கருதும் நிலையுள்ள ஜனாதிபதி - போர் ஒப்பந்தங்களையும் இந்தியாவுனேயே செய்ய முற்படுகிறார்.

இந்தியாவினுடைய இரண்டு போர்க்கப்பல்களும் இலங்கையின் ஐந்து போர்க்கப்பல்களும் இணைநது ஈடுபடவுள்ள இலங்கை கடற்பரப்பிலான கூட்டுப்பயிற்சி- இந்திய கடற்படையினர் நடமாட்டத்தை, இலங்கைக் கடற்பரப்பிலே அதிகரிப்பதற்கான முயற்சியாகவேயுள்ளது.

இதன் மூலம் விடுதலைப் புலிகளின் கடல்வழி போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்க முடியும். இதனால் விநியோகப் பாதைகளைச் சிதறடிக்க முடியும் என்றும் அரசு திட்டமிடுவதற்கான வாய்ப்புகளுமுள்ளன.

எனவே, அரசின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் போருக்கான ஏற்பாடுகளாகவே உள்ளன. அடித்தும் திருத்த முடியாத கழுதையாக மாறி வரும் சந்திரிகாவும், அவர் சார்ந்தோரும் தமது சுயநலன்களுக்காக நாட்டை அடகு வைக்கும் அபாய முயற்சியிலே ஈடுபட்டுள்ளனர்.

எப்படியாவது போரைத் தொடங்கியே தீர வேண்டும் எனும் இலக்கிலுள்ள அரசு - அவ்வப்போது விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள், மற்றும் ஊடகங்கள் என்பவற்றின் மீதும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகிறது.

மட்டக்களப்பிலே விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகம் மீதும், தினக்குரல் பத்திரிகை காரியாலயம் மீதான கைக்குண்டு வீச்சும், யாழ்ப்பாணத்திலே சக்தி தொலைக்காட்சி மீதான தாக்குதலும் இவ்வாறே நடந்து முடிந்துள்ளன.

அரசும், அதனோடு இணைந்த சக்திகளும் செய்து வரும் இந்த அடாவடித்தனத்துக்கு கருணா அணி மீது பழிசுமத்தப்பட்டதும், கருணா என்ற ஒன்று கிடையவே கிடையாதுதென மட்டக்களப்பு அரசியற்துறை பொறுப்பாளர் கௌசல்யன் உறுதிப்புடுத்தியுள்ளார்.

தன்னையே பாதுகாக்க முடியாத நிலையிலுள்ள கருணா- தூர விலகி இருந்து கொண்டு, ஒரு அணியைச் செயற்படுத்தக் கூடிய வலுவிலே இல்லை. இவரோடு இருந்த முக்கியஸ்தர்களுள் பலரும் ஏற்கனவே களையெடுக்கப்பட்டு விட்டார்கள். இவ்வாறான நிலையிலே, கருணாவால் எந்தவித சிறு தாக்குதல் முயற்சிகளையும் தனித்து மேற்கொள்வது என்பது முடியாத காரியமாகவே உள்ளது.

எனவே, காலத்துக்குக் காலம் பல்வேறு பெயர்களை கொண்டு இயங்கிய தமிழ் குழுக்களின் பெயரகளை வைத்து, அரசு நடாத்தி வந்த திரைமறைவுப் போரின் இன்னொரு முகமே - கருணா அணியின் பெயரிலே நடைபெற்று வரும் தாக்குதல் சம்பவங்களாகும்.

இது இவ்வாறு இருக்க, கடந்த வாரம் கொழும்பிலே நடைபெற்ற இந்தியத் திரையுலக பிரபலங்கள் கலந்து கொண்ட களியாட்ட நிகழ்வொன்றிலே, வெடித்த குண்டொன்றும் பாரிய பிரதிபலிப்பை தென்னிலங்கையிலும் குறிப்பாக அரச வட்டாரங்களிலும் தோற்றுவித்துள்ளது.

உல்லாசப் பயண சுற்றுலாத் துறை அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வில், வெடித்த குண்டு இலங்கையின் சுற்றுலா பயணத்துறை வருவாயை மோசமாகப் பாதித்துள்ளதாக பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். இது தொடர்பாக அரசு விசனமும், வேதனையும் அடைந்து அறிக்கைகளை விடுத்து வருவதுடன், இந்தியாவிடம் பகிரங்க மன்னிப்பையும் கோரியுள்ளது.

ஒரு சிறு குண்டு வெடிப்பே நாட்டின் சுற்றுலாத்துறை வருவாயை மோசமாகப் பாதித்துள்ளதாக கூக்குரலிடும் சக்திகள் - ஒரு உண்மையை உணர மறந்துள்ளனர்.

ஒரு சமயம் அரசின் திட்டம்மூலம், நாளை ஈழப்போர் மீண்டும் முனைப்பு பெறுமாயின், அதனால் ஏற்படும் பொருளாதார பின்னடைவு களோடு ஒப்பிடும் போது, இப்போது ஏற்பட்டுள்ள இந்த வீழ்ச்சி- புறக் கணிக்கத்தக்கதே. எனவே, அதனைப் பற்றி அதிக சிரத்தை எடுக்கும் அரசு - எதற்காகப் போரை ஆரம்பிக்க துடியாய் துடிக்கிறது என்பது தான் புரியாத விடயமாகவுள்ளது.

இந்தக் குண்டுவெடிப்புடன் இந்தியா தொடர்புபட்டுள்ளதால் தானோ என்னவோ, அதிக அக்கறை எடுத்துக் கொள்வதாக அரசு காட்ட முனைகிறது. இது இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்கான நடவடிக்கையாக இருக்கலாம்.

உண்மையாகவே சுற்றுலாத்துறை வருமானத்தை நோக்காக அரசு கொண்டிருப்பின், அது நிலையான சமாதானத்தை கொண்டு வருதற்கு முயற்சிக்க வேண்டும். அது இந்த நூற்றாண்டிலே முடியாத காரியமாகவே இருந்து வருகிறது.

எனவே, அரசு இந்தியாவோடு இணைந்து புலிகளை அடக்கவும், ஒடுக்கவும் முனைகிறது. ஆனால் இதனால் ஒடுங்கப்போவது என்னவோ - அரசும், அதனோடு கூட்டுச் சேர்ந்துள்ள இந்தியாவும் தான். இலங்கையின் போரிலே இந்தியா பங்கெடுக்க முனைந்தால், தன்னுடைய நாட்டிலும் எழும் எதிர்ப்பலைகளைச் சமாளிக்க கூடிய வலுவையும் இந்தியா கொண்டிருக்க வேண்டும்.

ஏனெனில் ஈழத்தமிழருக்கான இந்திய மக்களின் ஆதரவு - இன்னும் இன்னும் பெருகிக் கொண்டேயிருக்கிறது. ஏனெனில் உண்மையை புரிந்து கொள்ளக் கூடிய நிலையிலே உலகம் இன்றுள்ளது. ஆனால், சந்திரிகாவும் அவரோடு இணைந்தவர்களும் தான் என்றுமே அ.தி.மு. களாக இருக்கிறார்கள். அவர்களது பிடியிலிருந்து இலங்கையை காப்பாற்ற புத்தரால் கூட முடியாது. ♦

# 25 பயணிகளுடன் வாகனம்; கிறீஸ் தலைநகரில் கடத்தல்!



கிறீஸ் தலைநகர் ஏதென்ஸில் 25 பயணிகளுடன் சென்ற வாகனத்தை இனந்தெரியாத ஆயுதபாணிகள் கடத்தி வைத்துள்ளனர்.

இவ்வாறு கடத்தப்பட்ட வாகனத்தை கிறீஸ் இராணுவம் சுற்றி வளைத்துள்ளது. பயணிகள் வாகனத்தை கடத்தியவர்கள் ஏதென்ஸ் விமான நிலையத்திற்கு வாகனத்தை கொண்டுசென்று தாம் கிறீஸை விட்டு வெளியேறுவதற்கு உதவவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால், கடத்தப்பட்ட பஸ்சாரதி சாதுரியமாகத் தப்பி வெளியே சென்றுள்ளார். இருந்த போதிலும் இந்த பஸ்ஸிற்கு புதியதொரு சாரதியை அனுப்பி பஸ்ஸை ஏதென்ஸ் விமான நிலையத்திற்கு கொண்டு செல்லுமாறு கடத்தற்காரர்கள் கோரியுள்ளனர்.

பஸ்ஸிலுள்ள அனைத்துப் பயணிகளும் விமான நிலையத்தில் விடுவிக்கப்படுவர். நாம் ஒருவருக்கும் தீங்கிழைக்கவில்லை. ஆனால், புதிய சாரதி பஸ்ஸிற்கு அனுப்பப்படுவது தாமதமானால், பயணிகள் மீது கடும் நடவடிக்கை எடுப்போமென கடத்தற்காரர்களில் ஒருவர் செய்தி நிறுவனமொன்றுக்குத் தெரிவித்தார்.

அத்துடன் வீதிகளில் நிறுத்தப்பட்டுள்ள சகல பொலிஸாரும் விலககப்பட்டு தாம் விமான நிலையம் செல்ல அனுமதிக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் இந்தப் பாதையை பொலிஸார் மூடியுள்ளனர். அத்துடன் அப்பகுதிகளில் அவசர தேவைகள் ஏற்படுமிடத்து அம்புலன்ஸ் வண்டிகளும் நிறுத்தப்பட்டுள்ளன. சம்பவ இடத்தில் ஹெலிகொப்ரர் ஒன்று வட்டமிட்டு பறந்தவண்ணமுள்ளது.

கடத்தற்காரர்கள் பயணிகள் போல் இருந்துள்ளரெனவும், இவர்கள் ரஷ்யர்களாக இருக்கலாமெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த வாகனத்தைப் பொலிஸ் வாகனமொன்று அண்மித்தவேளை, இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகவும் - ஆனாலும் எவரும் காயமடையவில்லையெனவும் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

உலக நோக்கு



உலகிலேயே மிக உயரமான பாலம் தெற்கு பிரான்சில் கட்டப்பட்டுள்ளது. இதன் நீளம் 2.5 கிலோ மீற்றர். நேற்று முன்தினம் இந்தப் புதிய பாலம் திறக்கப்பட்டது.

வளைகுடாவில் பணியில் ஈடுபட்டிருந்த

# பிரிட்டன் கடற்படை அதிகாரி நாட்டிற்கு திருப்பி அழைப்பு!



வளைகுடாவில் பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பிரித்தானிய றோயல் கடற்படைக் கப்பலில் கட்டளை அதிகாரியைப் பதவி நீக்கியதன் பின்னர் உடனடியாக அவரை பிரித்தானியாவிற்கு திரும்பும்படி பிரித்தானியக் கடற்படைத் தளபதி உத்தரவிட்டுள்ளார்.

எச்.எம்.எஸ் சோம செற் என்னும் பிரித்தானிய றோயல் கடற்படைப் போர்க் கப்பலின் கட்டளை அதிகாரியான டேவிட் அக்சன் மீது அவருக்குக் கீழே தொழில் புரியும் கனிஷ்ட தர அதிகாரியொருவர் கொடுத்த முறைப்பாட்டினை அடுத்தே குறிப்பிட்ட அதிகாரியின் பதவி நீக்கப்பட்டு பிரித்தானியாவிற்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட போர்க் கப்பல் இங்கிலாந்திற்குத் திரும்பும் வழியில் ஜிப்ரோல்ட்டர் துறைமுகத்தில் தரித்திருந்த வேளையில் டேவிட் அக்சன் விமானம் மூலம் பிரித்தானியாவிற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

ஆனால் இதுவரையில் அக்சன் மீது எவ்வகையான குற்றம் சாட்டப்பட்டது என்பது பற்றியோ அல்லது இவர் மீது என்ன வகையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்பது தொடர்பாகவோ இதுவரையில் தகவல்கள் வெளியிடப்படவில்லை.

இவர் மீது மேற்கொள்ளப்படும் விசாரணைகளை அடுத்து அவர் குற்றவாளி அல்ல என நிரூபிக்கப்பட்டால் அவரது பதவி மீண்டும் வழங்கப்படும் என பிரித்தானியக் கடற்படைத் தகவல்கள் தெரிவித்தன.

# ஆப்கானில் கடத்தப்பட்ட துருக்கிப் பிரஜை சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார்!

ஆப்கானில் இனந்தெரியாதவர்களால் நேற்றுமுன்தினம் கடத்தப்பட்ட துருக்கிய பிரஜையான பொறியியலாளரின் சடலம் ஆப்கானின் குனார் மாகாணத்தில் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தப் பொறியியலாளர் ஆப்கானில் வீதி திருத்தும் பணிகளில் ஈடுபட்டிருந்த வேளை, கடத்தப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவரை மீட்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் கடத்தற்காரர்களின் இருப்பிடத்தை அண்மித்தவேளை, இவர் உயிரிழந்து கிடந்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை இவருடன் கடத்தப்பட்ட இவரது வாகனச் சாரதியும், மொழி பெயர்ப்பாளரும் ஏற்கனவே விடுதலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவரை கடத்தி, கொலை செய்தது யாரென்பது இதுவரை தெரியவரவில்லை.

இந்தப் பொறியியலாளரும் அவரது உதவியாளர்களும் கடத்தப்பட்டஇடம் மிகவும் ஆபத்தான பகுதியெனவும் இது பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் உள்ளதனால் இங்கு இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளின் செல்வாக்கு அதிகமென பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.



பஹ்ரன் நாட்டின் இசாநகரில் அந்த நாட்டின் தேசிய தினத்தை முன்னிட்டு உலகிலேயே மிகப் பெரிய தேசியக் கொடி பறக்கவிடப்பட்டது. முன்னதாக அந்தக் கொடியின் நீளம் அகலம் ஆகியவை வல்லுநர்களால் அளந்தறியப்பட்டது. இந்தக் கொடியின் நீளம் 169.5 மீற்றர் அகலம் 97.1 மீற்றர்.

# வீரவணக்கம்

## கடற்புலி

## லெப் கேணல் மறவன் மாஸ்ரர்

[எலியாஸ்பிள்ளை ஸ்ரனிஸ்லாஸ் தாளையடி,

மேலாளர், கடற்றொழிலாளர் சங்கங்கள் சமாசங்கள், சம்மேளனம்]



நீலக்கடல் மோதும் தாளையம்பதியுதித்து
நீலக்கடலில் வந்த நீசர்களை விரட்டி
நீலக்கடலினிலே தமிழீழக் கொடிபறக்க
நீலக்கடலை எம் சொத்தாக்கித் தந்தீர்கள்.

மறவன் எனும் பெயர் கொண்டு
மறத்தமிழர் தலை நிமிர
ஐம்பதிலும் இயலுமென அந்நியரை ஆட்டிவிட்டு
மின்னாமல் முழங்காமல் கண் மூடிக் கொண்டதென்ன?

கடற்கரைக் காவலனாய் கண்ணயராதுழைத்து
மிடுக்காக வலம் வருவாய் – விதியுன்னை வென்றதுவோ.
துடுக்காக நீ வளர்த்த எதிர்காலப்புலி வீரர்
எடுப்பாக பின் தொடர்வார் இதிலேதும் ஐயமில்லை.

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.
சமாச உப அலுவலகமும் அங்கத்துவ சங்கங்களும்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தொண்டர் ஆசிரியர் நியமனங்களை இடைநிறுத்த ஜனாதிபதி உத்தரவு!

(கொழும்பு)

தொண்டர் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவிருந்த அனைத்து நியமனங்களையும் இடைநிறுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க - மாகாண ஆளுநர்களுக்கும், முதலமைச்சர்களுக்கும் பிரதம செயலாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

முன்னர் தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டபோது தகுதியற்றவர்கள் பலருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்தே, தற்போது வழங்கப்படவிருந்த நியமனங்களை உடனடியாக இடைநிறுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

நியமனத்துக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட தொண்டர் ஆசிரியர்களது விபரங்கள் முறையாகப் பரிசீலிக்கப்பட்ட பின்னர் நியமனங்கள் வழங்கப்படும் என ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.



கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் - நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் பேச்சுக்களை நடத்தியதைப் படத்தில் காணலாம்.

## ஜே.வி.பியினரின்...

இவ்வாறான நிலையில் நோர்வேயின் அனுசரணைப்பணி மற்றும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அரசின் தீர்க்கமான நிலைப்பாட்டை ஜனாதிபதி உடனடியாகத் தெளிவுபடுத்தவேண்டியது அவசியம்.

ஜனாதிபதி முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கும், நோர்வேயின் அனுசரணைப் பணிக்கும் உதவி வழங்கும் நாடுகள் பூரண ஆதரவு வழங்கும். என அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## நெருக்கடியான...

இந்த சந்திப்பின்போது இரு தரப்பும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினர். எனினும் இரு தரப்புகளிடையேயும் நம்பிக்கையை கட்டியெழுப்பி சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பாகவும், யுத்தநிறுத்த உடன்பாட்டினை இரு தரப்பும் இறுக்கமாக கடைப்பிடிக்க வேண்டிய அவசியம் குறித்தும் நீண்ட நேரம் கலந்துரையாடினோம்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் விடுதலைப்புலிகளின் செய்தியொன்றை அரசாங்கத்திற்கு கொண்டுசெல்கின்றோம் என அவர் தெரிவித்தார்.

# குளித்துக்கொண்டிருந்த ஈ.பி.டி.பியினர் மீது சூடு

அம்பாறை - ஹிங்குரான பகுதியில் குளித்துக்கொண்டிருந்த ஈ.பி.டி.பியினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோதும் - எவரும் காயமின்றித் தப்பியதாகக் கூறப்படுகிறது.

ஆற்றில் குளித்துக்கொண்டிருந்த இரு ஈ.பி.டி.பி. உறுப்பினர் மீது நேற்று மாலை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இதில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. இதேவேளை, இந்த சம்பவத்தை அடுத்து பொலிஸார் அப்பகுதியில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞர் இருவரைக் கைதுசெய்தனர்.

## தரையால் வந்த...

கொழும்பு - இரத்மலானை விமான நிலையத்திலிருந்து பலாலி விமான நிலையத்திற்கு விமான மூலம் சென்று -அங்கிருந்து தரை மார்க்கமாகவே கிளிநொச்சிக்குச் செல்வார் என்று முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

ஆனால், நேற்று விமானப்படையினருக்கு ஜனாதிபதி சந்திரிகா விடுத்த விசேட பணிப்பையடுத்து சொல்ஹெய்ம் நேற்றுக்காலை விமானபபடை ஹெலிகொப்டர்மூலம் கொழும்பு பொலிஸ் பார்க் மைதானத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி அழைத்துச்செல்லப்பட்டார்.

அனுராதபுரத்துக்கு அண்மையில் சென்றுகொண்டிருந்தபோது சீரற்ற காலநிலை காரணமாக அதற்கப்பால் பயணஞ்செய்யமுடியாமல் சொல்ஹெய்ம் பயணஞ்செய்த ஹெலி அனுராதபுரத்தில் தரையிறக்கப்பட்டதையடுத்து அவர் தரைமார்க்கமாகவே கிளிநொச்சிக்குப் பயணமானார்.

காலை 11 மணிக்கு கிளிநொச்சியில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான சந்திப்பு இடம்பெறும் எனத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், சொல்ஹெய்மின் வருகை தாமதமானதால் பிற்பகல் 2.30 மணிக்கே பேச்சுக்கள் ஆரம்பமாகின.

புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் - புலிகளின் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிற்பகல் 4 மணிவரை நீடித்த இந்தச் சந்திப்பையடுத்து, கிளிநொச்சி விளையாட்டு மைதானத்திலிருந்து சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் விமானப்படை ஹெலிமூலம் புறப்பட்டுச் சென்றனர். கொழும்பு திரும்பிய நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நேற்றிரவு ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திக்கத் திட்டமிட்டிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது புலிகளுடன் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து சொல்ஹெய்ம் - ஜனாதிபதி சந்திரிகாவுடன் பேச்சு நடத்தத் திட்டமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் நேற்றிரவும் இளைஞர் சுட்டுக்கொலை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - கல்வயலில் நேற்றிரவு இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினராக இருந்த அருள் ஜெகன் என்ற 25 வயது இளைஞரே சுட்டுக்கொல்லப்பட்டார்.

நான்காவது குறுக்குத்தெரு கல்லடியில் வைத்து நேற்றிரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

# அவசரமாக இரத்தம் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் அனைத்து இரத்த வகைகளும் அவசரமாகத் தேவைப்படுவதாக வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரி அறிவித்துள்ளார்.

பல்வேறு நோயாளர்களுக்கும், விபத்துக்களில் காயமடைந்து வருவோருக்கும் இரத்தம் ஏற்றவேண்டிய தேவை இருப்பதால் இரத்ததானம் செய்ய விரும்புவோர் உடனடியாக இரத்த வங்கிக்கு வருகை தந்து நோளாளர்களின் உயிர்களைக் காக்க உதவுமாறு அவர் கேட்டுள்ளார்.

# சமாதான விரோதக் கருத்துக்கள்...

வைத்திருக்கின்ற நம்பிக்கைகள் தற்போது தகர்ந்திருக்கின்றது. மக்கள் பொறுமையிழந்திருக்கின்றனர். அதாவது நீண்டகால யுத்தத்தால் பாதிக்கப்பட்டு பெரும் அவல நிலையை, நெருக்கடியை எதிர்நோக்குகின்ற எமது மக்கள் பெரும் விரக்தி நிலையை அடைந்திருக்கின்றனர் என்பதை நாங்கள் தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

அவர்கள் இந்தப் பேச்சுவார்த்தை முயற்சிகள் மீது நம்பிக்கையிழந்து வருகின்றனர். எமது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பவேண்டுமாக இருந்தால் எமது மக்களுடைய அவசரமான, மனிதாபிமானப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களை முன்னெடுப்பதுதான் எமது மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு உதவும்.

இந்தவகையில் எமது தேசியத் தலைவர் இந்த நிலைப்பாட்டை, தனது அவசர வேண்டுகோள் மூலம் தனது மாவீரர்தின உரையிலேயே அரசாங்கத்துக்குத் தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்.

அதற்கு சாதகமான பதிலை தெற்கிலிருந்து விரைவாக பெற்றுத் தருவதன் மூலம்தான் இந்த நிலையைச் சீராக்கமுடியும் என்பதை நாங்கள் இன்று நோர்வேத் தரப்பு ஊடாக மீண்டும் ஆணித்தரமாக வெளியிட்டிருக்கின்றோம்.

*கேள்வி:* இதற்கு காலக்கெடு ஏதும் விதித்துள்ளீர்களா?

*பதில்:* நோர்வே அனுசரணையாளர்களும் பெரிய நம்பிக்கையோடு தங்களது நிலைப்பாட்டை தெரிவித்ததுபோல் தெரியவரவில்லை. அவர்கள் முயற்சி எடுக்கிறார்கள், கடுமையான முயற்சியோடு இருப்பது போலவே தெரிகின்றது. தெற்கிலே இருந்து, அரசாங்கத்திடம் இருந்து சாதகமான பதில்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையை அவர்களால் தர முடியவில்லை.

*கேள்வி:* உங்களுடைய எதிர்பார்ப்பு எப்படி இருகின்றது? நம்பிக்கை தருவதாக இருக்கின்றதா?

*பதில்:* எங்களைப் பொறுத்தவரையில் எந்தவித நம்பிக்கையும் இன்றைய சந்திப்பில் ஏற்படுத்தப்படவில்லை என்றுதான் நான் நினைக்கின்றேன்.

*கேள்வி:* நம்பிக்கை ஏற்படுத்தப் படாவிட்டால் அடுத்த கட்டமாக என்ன நடவடிக்கை எடுப்பதென்று உத்தேசித்திருக்கிறீர்கள்?

*பதில்:* மக்கள் மீதான இராணுவக் கெடுபிடிகள், நெருக்கடிகள் அதிகரிக்கின்றன. இராணுவத்தினர் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். யுத்தநிறுத்த சூழலுக்கு பல நெருக்கடிகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. தமது உரிமைகளையும் நாளாந்த வாழ்வியல் நெருக்கடிகளுக்கு தீர்வுகளையும் காண போராட்ட முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர். அதறகு அரசாங்கம் மதிப்பளித்து தீர்வு காணவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

எதிர்வரும் நாட்களில் மக்கள் தமது நிலைப்பாடுகளை, கோரிக்கைகளை, அபிலாசைகளை வெளிப்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடும் சூழல் தோன்றிவருவதை உணரமுடிகிறது. அண்மைக் காலத்தில் இராணுவம் எடுத்த நடவடிக்கைகளை, வன்முறைகளை, தவிர்த்து இந்த யுத்த நிறுத்தத்துக்கு களங்கம் ஏற்படாது பார்த்துக்கொள்ள வேண்டும் என சர்வதேச அனுசரணையாளர்களுக்கும் யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கும் கூறியுள்ளோம்.

*கேள்வி:* போர் நிறுத்த சூழல் எப்படியுள்ளது.?

பதில்: அண்மையில் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, திருகோணமலை போன்ற இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் போர் நிறுத்த சூழலுக்கு மிகுந்த நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. கண்காணிப்புக் குழுவினரை இராணுவத்தினர் மதிப்பளிக்காது நடத்தியுள்ளனர். அவர்களுக்கு முன்பாகவே மக்கள் மீது யுத்தநிறுத்தத்தை மீறும் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். ஆகவே, அரசிடம் இருந்தும் படையினரிடம் இருந்தும் யுத்த நிறுத்தத்திற்கான உத்தரவாதத்தை பெற்றுத்தர வேண்டும் என்று கோரியுள்ளோம்.

*கேள்வி:* கடந்த மாவீரர் தினத்துடன் ஒப்பிடும்போது இம்முறை மாவீரர் தினத்தில் இராணுவத்தினரின் நெருக்கடிகள் அதிகரித்துள்ளதை எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கிறீர்கள்?

*பதில்:* மாவீரர் தினத்தில் மட்டுமல்ல. முன்னைய ஆட்சியின்போது பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டிருந்தாலும், யுத்தநிறுத்தச் சூழல் ஓரளவு செம்மையாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால் புதிய அரசாங்கம் பதவியேற்ற பின் படைத்தரப்பினர் மிக மோசமாக யுத்த நிறுத்த மீறலில் ஈடுபடுகின்றனர். இராணுவத்தினர் யுத்தத்தை நோக்கியே நகர்கின்றனர்.

*கேள்வி:* வடக்கு கிழக்கு பகுதிகளில் இராணுவம் யுத்தத்தை நோக்கி செல்வதாக கூறுகின்றீர்கள் அதேபோல் விடுதலைப்புலிகளும் யுத்தத்திற்கான ஆயத்தங்களை செய்வதாக கூறப்படுகின்றதே?

*பதில்:* அது தவறு. விடுதலைப் புலிகள் எப்பொழுதுமே எமது பிரதேசம் மீதும், மக்கள் மீதும் யுத்தம் கட்டவிழ்த்து விடப்படும்போது அதை எதிர்கொண்டு தற்காத்துக் கொள்ளும் பொறுப்பில் உறுதியாக உள்ளோம். ஆனால், படைத் தரப்பில்தான் யுத்தத்திற்கான முன்நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பாதுகாப்பு செலவிற்கு அதிக நிதி ஒதுக்கீடு, படை ஒத்திகை புதிய காவல் அரண் அமைப்பு, மக்கள் மீதான கெடுபிடிகள், ஏனைய நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்கள் - ஒத்திகைகள் என எல்லாமே யுத்த சூழலைநோக்கி நகர்வது போலவே தோன்றுகின்றது.

*கேள்வி:* எதிர்வரும் 25 ஆம் திகதி விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தை ஒருதலைப்பட்சமாக அறிவித்து மூன்று வருடங்கள் ஆகின்றன. இந்த நிலையில் மக்களுக்கு என்ன சொல்ல விரும்புகின்றீர்கள்?

*பதில்:* மாவீரர் தின உரையில் தலைவர் தெளிவாக கருத்துக்களை முன்வைத்திருக்கிறார். மக்கள் இன்றைய சூழலைத் தெளிவாகப் புரிந்துள்ளனர். தமது அன்றாட பிரச்சினைக்கு தீர்வுவேண்டி, உரிமைகள் வேண்டிப் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். இது இன்னும் தீவிரமடையும் என்றே எதிர்பாக்கப்படுகின்றது.

*கேள்வி:* ஜே.வி.பி. சமாதானத்தை எதிர்த்துக்கொண்டு நோர்வே அரசாங்கத்திடம் நிதியுவிகளைப் பெற்றுள்ளதைப் பற்றி?

*பதில்:* சமாதான முன்னெடுப்புக்களை அடிப்படையாக கொண்ட உதவிகள் வழங்குவதில் சர்வதேச சமூகம் தளர்வுகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்கே எமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளோம். அவ்வாறான தளர்வு தெற்கில் சமாதானத்தை சீர்குலைக்கும் சக்திகளுக்கு வலுவூட்டுவதாக அமையும் என்பதை எடுத்துக் கூறியுள்ளோம். சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுத்து சமாதான வழிக்குக் கொண்டு வரவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

*கேள்வி:* மாவீரர் தின உரைக்கு சர்வதேச சமூகத்திடம் இருந்து நல்ல சமிக்ஞைகள் கிடைத்துள்ளனவா?

*பதில்:* சர்வதேச சமுகம் தலைவரின் நிலைப்பாட்டை முழு அளவில் ஏற்று ஆதரிப்பதாகவே தெரிகின்றது. ஒரு நியாயமான நிலைப்பாட்டை தேசியத் தலைவர் முன்வைத்துள்ளார். கடந்த காலத்தில் நாம் எடுத்த முயற்சிகள், பேச்சுவார்த்தை முயற்சிகளின்போது நடைபெற்ற சம்பவங்கள் எல்லாவற்றையும் வைத்து இன்றுள்ள சூழ்நிலை சம்மந்தமாகத் தெளிவுபடுத்தியுள்ளார். எதிர்காலத்தில் நாம எடுக்கவேண்டிய நிலைப்பாடுகள் குறித்தும் முன்வைத்துள்ள அதே சமயம், சமாதான முன்னெடுப்பு தொடர்பாகவும் தனது பற்றுதியை வெளிப்படுத்தியுள்ளார். அதனை சர்வதேச சமூகம் தெளிவாகப் புரிந்து ஏற்றுக்கொண்டு இருக்கின்றது என்றே நான் நம்புகிறேன்.

*கேள்வி:* போர் நிறுத்த உடன்படிக்கை நெருக்கடி நிலைக்கு உள்ளாகியிருப்பதாக சொல்ஹெய்ம சொன்னார். நீங்கள் போர் நிறுத்தத்தை விட்டு விலகப் போவதாக ஏதும் கூறினீர்களா?

*பதில்:* போர் நிறுத்த உடன்படிக்கையில் படைத்தரப்பால் ஏற்படுத்தப்பட்ட அண்மைக்கால நெருக்கடிகள்பற்றித் தெளிவாக விளக்கியுள்ளோம். அதை வைத்துக் கொண்டு அவர் அப்படிக் கூறியிருக்கலாம். ஏனெனில் - மன்னார், திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் போன்ற பல இடங்களில் நடைபெற்ற சம்பவங்கள் இதையே வலியுறுத்துகின்றன.

*கேள்வி:* யுத்தம் இல்லாது விடுதலைப் போராட்டத்தை எந்தவழியில் கொண்டு செல்லப்போகின்றீர்கள்?

*பதில்:* யுத்தம் இல்லாமல் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்பது எமது கைகளில் இல்லை. இராணுவம் ஆக்கிரமித்துள்ள தமிழர் தாயகத்தில் மேற்கொண்டு வரும் நெருக்கடிகளுக்கு எதிராக மக்கள் போராட்டங்களை நடத்துகின்றனர். இதை மறுதலித்து வன்முறையில் இராணுவம் ஈடுபடுமானால் மோசமான விளைவுகளே ஏற்படும். அப்போது எமது தலைமை தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ளும்.

என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.